விவேகோதயம்.

மதுரை மாணவர் செந்தமிழ்ச் சங்கத்தினின்று
வெளிவரும்
மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

"அறிவுடையார், எல்லாம் உடையார்; அறிவிலார்
என்னுடைய ரேனும் இலர்"—திருக்குறள்.

தொகுதி ௧.	நள ௵ தை ௴ 1917 ௵ ஜனவரி ௴	பகுதி ௧௨

புதல்வர் கடமை.

(318-ஆம் பக்கத் தொடர்ச்சி.)

கிழத்தாய் இங்ஙனம் கூறி வாய் மூடுமுன், சீறி, ஒரு

வன்புலிபோற் பாய்ந்து, மருமகள், தன் மாமிமுன் நின்(று)
"என் புகன்றாய்? இன்னும் இயம்புவாய்!—'முன்ன(ம்)இரு 1
நாலுவருஷம்சமைந்து நாற்றமெடுத் தாள்'என்றும்,
'மேலழகில் லாமூளி வேசை' என்றும்,—'ஞாலமதில் 2
சீந்துவார் அற்றுத் திரிந்தவனைக் கொண்டுவந்து
வாய்ந்த நடுமனையில் வைத்தே(ன்)'என்றும்,—காந்தனிடம் 3
சொல்லிப் பரி(சு) அழித்த தோஷிக் குரங்கே! உன்
பல்லைப் பிடுங்கவொரு பல்இல்லையே!—அல்ல(து) 4
அடக்கற்ற நெஞ்சைவகிர்ந் தாறுகூ(று) ஆக்கித்
தொடக்குற்ற நாவைத் துணிப்பேனா—விடக்கெடுத்த 5
வங்குவற்றிப் பேய்நாயே! வாயிலிடும் பானாயே!
சங்கைகெட்டுப் போனாயே தானாயே—பங்கமுற்ற 6
வெங்கங் கழுதாய்! விருதா வெறுங்கழுதாய்!
எங்கெங்(கு) அழுதாய்? இரப்புணியே!—பொங்கும்பால் 7

3.—காந்தன்-கணவன், 6.—வெங்கங் கழுதாய்-விதியற்ற கழுதையே, வெறுங்கழுதாய்-வெறும் பிசாசே.

ஊட்டிவளர்த் தாலும் உயிர்தீர் விஷம்அளிக்கும்
மோட்டரவை ஒத்த முழுநீலி!—நாட்டில்உனை 8
நல்லவள் என(று) ஆர்உரைப்பர்? நாறச் சவமேஉன்
சில்வாயைப் பேர்த்துத் திருப்பட்டா?—வல்இருளிற் 9
பூசலிடு பேய்க்கணமே! போழ்வாய் கிழட்டோரி
பேசுவதைப் பாரப்பா பெப்பெப்பே—மாசுபட்ட 10
வாருகோ லால்உன்னை வாட்டிஎடுப் பேன்உனக்கிங்(கு)
ஆர்சலிகை? சொல்வாய் அறைகின்றேன்—பார்"எனவே, 11

(கிழவி தன்னை நிந்தித்து உரைத்துக் கொண்டிருக்கும் போதுஎதிர் மொழி கூறாது கேட்டுக் கொண்டிருந்த தன் நாயகனிடம் வெறுப்புக் காட்டியும், தன் மாமி மீது வெகுண்டும்)

காறிஉமிழ்ந் தாள்;அவளும் காறிஉமிழ்ந் தாள்.மருகி
தூறியிரைந் தாள்,இவளும் தூறினாள்—மீறி 12
இடித்தாள் மருமகள்; ஈண்(டு) எழுந்து மாமி
கடித்தாள் ஒருகரத்திற் கௌவி—துடித்தவளும் 13
பற்றிமயி ரைப்பிடித்தாள். பாழ்ங்கிழவி வௌவால்போல்
தொத்திமயி ரைப்பிடித்துத் தொங்கினாள்—சிற்றிடையில் 14
துத்தாரிப் பட்டுமெல்லச சோர்ந்து நழுவிஅந்த
வித்தாரி கால்சறுக்கி வீழ்ந்திட்டாள்—அத்தருணம் 15
மாலேறிக் கொண்ட மருமகளைப் போட்டமுக்கி
மேலேறிக் கொண்டாள் விசைக்கிழவி.—கோலியமூ 16
தாட்டியவளானாலும் தயங்குசம யத்தி(ல) நல்ல
வேட்டைவந்து சாய்த்தால் விடுவாளோ?

(பெண்சாதி கை வலுக்கும் மட்டும் பிரமானந்தத் தோடு வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த மகன், தன்மனைவி எக்கச சக்கமாக அகப்பட்டு வீழ்ந்தமையையும், அவள் மீது கிழவி ஏறி உட்கார்ந்து அமுக்கியதையும் காண மனம் சகியாதவனாயினன். இந்த)

—ஆட்டமெல்லாம் 17

9.—சில்வாய்-ஓட்டைவாய், 10.—பூசலிடு-கதறும், போழ்வாய்-பிளந்தவாய், ஓரி-நரி, 12.— தூறி-வைது, 15.—துத்தாரி-ஓலிதச்சீலை, 15.—வித்தாரி-சமர்த்தி, 10.—மால்-மயக்கம், கோலிய முதாட்டி-கூனற்கிழவி.

கண்டு விலக்கியவன் காதலியைச் சீர்திருத்தி
நுண்டுகளை நீக்கி நொசி(வு)அகற்றிப்—பண்டுபெற்ற 18
அன்னைமேற் கோபம் அதிகரிக்கப் பின்னு(ம்) அன்னை
தன்வதனம் நோக்கிஇவை சாற்றுவான்:—"என்இருகண் 19
ணுட்டியுடன் நீசரியோ? அஞ்சாக் கிழப்பதரே!
போட்டிபண்ணிச் சீறிஞ்சு போகாதே—தாட்டுறுத்தும் 20
பாதுகைபோல் ஒத்துப் படிந்தாட வாவிடில் என்
பேதையவள் அப்படித்தான் பேசுவாள்—வாதுபடு 21
பேய்இறைஞ்சும் நீலமையினுள் பேசிஎனைத் தூஷணமாய்
ஆயிரம்வை தாலு(ம்) எனக்(கு) ஆனந்தம—வாயில் 22
திருகிருந்த சொல்லாற் சிலர்புறணி பேசி
அருகிருந்தாற் போதுமெனக்(கு) அன்பே-இருள்செறிந்த 23
பாதகம லம்படிந்த பாவியேன் மீதி(ல்) அவள்
பாதகம லம்படிந்தாற் பாவம்போம்—கோதில 24
அவளேஎன் தெய்வம், அவளேஎன் செல்வம்,
அவளேஎன் கல்வி, நிறை ஆஸ்தி.—அவட்(கு) இன்னும் 25
தங்கப் பணி இடுவேன்; தாவுகுழற் பூமுடிப்பேன்;
குங்குமப்பொட் டிட்டுமுத்தம் கொஞ்சுவேன்-செங்கையினுல்
மஞ்சளரைத் துக்கொடுப்பேன்,வண்ணமலர்க் சால்பிடிப்பேன்
இன்சொற் படிநடப்பேன் என்இஷ்டம்—நெஞ்சினுனக்(கு)27
ஏண்டி பொறுமை? இதற்(கு) ஏனே வயிற்றெரிச்சல்?
ஆண்டான் கிடைத்த(து) அவள்அதிர்ஷ்டம்-வேண்டியொற்
கால்மேல் தவமிருந்து கர்ப்பமுற்றுப பெற்றுளாம்! [றைக்
வால்தலையைக் கிள்ளி வளர்த்தாளாம்!—பாலப் 29
பருவ(ம்)மணம் சூட்டிஎனைப் பார்த்தாளாம உள்ளத்(து)
அருமையுறக் கொண்டாடி னுளாம்!—மருமகளை 30
வைத்தவரி சைக்கு மதியா(து) இவளை அவள்
'அத்தை'என்று சொல்லி அழைக்கலையாம் —மெத்தமெத்தத்31

18.—நுண்டு-சொடக்குமுடக்கு, நொசிவு-வருத்தம், 20.—தாள் துறுத்தும்-காவில் அணியும், 23.—திருது-வஞ்சனை, புறணி-கோள், 24.—பாதக மலம்-பாவமாகியகுற்றம், பாதகமலம்-திருவடித்தாமரை.

தோதலித்துப் பேசும் சுணைகெட்ட மூளி! உனக்(கு)
ஏ(து) அமைத்த நான்கினில்ஒன் றேனுமே?—காதகி! உன் 32
கோலஉடல் கூனிக் குறுகித் தளர்ந்து மின்னும்
சால அகங்காரம் தளர்ந்திலதே!—வாலிபாய் 33
எண்ணரிய பேர்மடிந்தார்! யாதோஉன் வல்உடலை
மண்ணறியும் காலம் வரஇலையே!—திண்ணியவெம் 34
கூற்றுவனும் உன்உயிரைக் கொள்ளா(து) அகலகின்றான்
ஆற்றரிய நின்கொடுமைக்(கு) அஞ்சியன்றோ?—வேற்(று)உருவ
நீலிஎன வந்துதித்தாய்! நீதொலைந்து போம்அளவும்
ஓலமிட்ட பூசல் ஒழியாதே.—வால்ஒடுக்கிப்' 36
பேசாதே போவெளியில் பேயே'' எனக் கொடுத்தான்
கூசாதே பூதிக் கொடை. 37

ஆ! ஆ!! இத்தகைய துரோகிகள் என்னகதி அடைவார்களோ அறியேம்.

(இன்னும் வரும்)

பத்திராதிபர்.

கமலாவதி.

அங்கம்–3
காட்சி–2.

இடம்.–மாளவநாட்டு அரண்மனையிலோர்பாகம். காலம்.–பிற்பகல்.

[குணமாலிகை அங்குமிங்கும் உலாவிக் கொண்டிருக்க, ஓர்தாதி பிரவேசிக்கிறாள்.]

குண. (தாதியை நோக்கி) எதற்காக அடிக்கடி வந்து தொந்திரவு செய்கின்றாய்? நான் வர முடியாதென்று சொல்லிவிடு என் தாயாரிடத்தில.

32.—தோதலித்து–மரியாதையின்றி, நான்கு–நாணம், மடமை, அச்சம், பயிர்ப்பு, 36.—பூதிக்கொடை–மணலைக் கவ்வும்படி கெட்டித் தள்ளல்.

தா. அம்மணி! அப்படியே சொன்னேன். அதன்மேல் அவர்களே இங்குவந்து கொண்டிருக்கிறார்கள் தங்களைக் காண.

குண. சரி, நீ போகலாம்.

[தாதி போகிறாள்.]

(விசனத்துடன் தனக்குள்) ஹா! நான் அநாதையாக இப்படிப் போவேனென்று கனவிலும் கருதவில்லையே! என் தமையனார் மீது ஒரு அபாண்டமான பழியையல்லவோ சுமத்தி அவரை இந்நாட்டை விட்டு ஓட்டி விட்டாள் எனது அன்னை. இவ்வளவுக்கும் கொடூரசேனனே காரணமென்று எனக்குச் சந்தேகம் ஏற்படுகின்றது. ஆ! பாவிகளே! என் பிராணநாதர் எனது அருமைச் சகோதரரின் கண்பாரதலின் உங்களுடைய கொடுமையை அவரிடத்திலும் காட்டிவிட்டீர்களே! அவரா என்தந்தையைக் கொல்ல முயன்றவர்? இது தெய்வத்திற்கு அடுக்குமா? குற்றவாளியையல்லவோ கண்டுபிடிக்க வேண்டும்! அன்னையிருந்தும், அநாதை யானேனே!

[மோஹனா பிரவேசிக்கிறாள்.]

மோ. கண்ணே! குழந்தாய்! என்மீது உனக்கேன் வருத்தம்? சில தினங்களாக உன்னைக் காணவிரும்பி, அழைத்துவரச் சொன்னால், நீ 'வரமுடியாது' என்று சொன்னாயாம். நானாவது உன்னைப் பார்த்துச் செல்லலாமென்று வந்தேன். நான் உனக்குச்செய்த தீங்கென்ன? கண்ணே! குணமாலிகா!

[குணமாலிகையைத் தழுவிக் கொண்டு]

என்மீது உனக்குப் பிரியமில்லா விட்டாலும், எனக்கு உன் மீதுள்ள பிரியம் மாறுமென்று கருதினையோ? ஏனம்மா என மீது வருத்தம்? நான் உனக்குச் செய்த தீங்கென்ன?

குண. (விசனத்துடன்) என்தமையனார் மீதும், என்பிராணநாதர் மீதும் அடாப்பழி சுமத்தி —

மோ. ஸ்! ஜயகேசரியை நீ இனி 'பிராண நாத'ரென்று சொல்லாதே. அப்பாவியே உன்தந்தையைக் குத்தி வீழ்த்தியவன்!

அவனை நீ கனவிலும் நினைக்கலாமோ? நீ சிறுகுழந்தை யானபடியால், ஒன்று மறியாய். சரி, போனது போகட்டும். இனியாவது எனதிஷ்டப்படி நடப்பாய்!

குண. அம்மா என் தந்தையை ஜயகேசரியார் குத்தியதாகத் தாங்கள் கருதுவது முற்றிலும் தவறு. நான்சத்தியமாகச் சொல்லுவேன். அவரைக் குத்தி இவருக்கென்ன ஆக வேண்டும்?

மோ. அப்படியானால், பின்னையார் அது செய்தது? ஸ்ரீதானுக்குப் பரிந்து அத்துரோகி ஜயகேசரி இக்காரியம் செய்திருக்கக் கூடாதோ?

குண. அவர் ஒருக்காலும் செய்திரார். குற்றவாளி கொரேசேனனென்றே நான் கருதுகின்றேன்.

மோ. (கோபத்துடன்) குழந்தாய்! இனி அப்படிச் சொல்லாதே! கொரேசேனன் எப்பொழுதும் நம்முடைய நலத்தையே நாடுகின்றவன். வீண்பழி அவன் மீது சுமத்தினல் பாவமன்றோ!

குண. அப்படியா?—ஜயகேசரியார் மீது மாத்திரம், தாங்கள் வீண்பழி சுமத்தலாம் போலிருக்கின்றது! இருக்கட்டும்.—'ஜயகேசரியாரே குற்றவாளி' என்று தங்களால் நிரூபிக்க முடியுமா?

மோ. ஸ! சிறுகுழந்தையாகிய நீ இவ்விஷயங்களி லெல்லாம் பிரவேசிப்பது சரியல்ல.

குண. நான் சிறுகுழந்தை. எனக்கு ஒன்றும் தெரியாது தான். பெரியவர்களாகிய தாங்கள் சுயபுத்தி கொண்டா எதுவும் செய்கிறீர்கள்? கொரேசேனன பேச்சு தங்களுக்கு ஸத்தியவாக்கு.

மோ. அவன் மீதேன் உனக்கு இவ்வளவு கோபம்? கொரேசேனன குற்றவாளி என்றனையே!—அதை உன்னல் நிரூபிக்க முடியுமா?

குண. என்னல் உறுதிகூற முடியாது. ஏதோ கொரேசேனன் மீது எனக்குச் சந்தேகம். உண்மையை அறிய நான் ஒரு

உபாயம் சொல்லுகின்றேன். அதன்படி செய்தால் உண்மை வெளிப்பட்டாலும் வெளிப்படும்.

மோ. என்ன உபாயம் அது? சொல்லேன்.

குண. அதனைப் பிறகு சொல்லுகின்றேன். ஆனால்,—நான் சொல்லுகிறபடி மட்டும்—தாங்கள் செய்ய வேண்டும்.

மோ. அப்படியே செய்ய எனக்கு ஆக்ஷேபமில்லை. ஆனால்,—குற்றவாளி கொரேசேனன் என்று, உன்னால் ஒருக்காலும் நிரூபிக்க முடியாது. சரி,—நான் என்னவோ செய்ய வேண்டுமென்றாயே! அதென்ன? இப்பொழுதுதான் சொல்லேன்.

குண. நான் சொல்லப்போகிற விஷயம் நம்மிருவருக்குள் மாத்திரம் இருக்க வேண்டும். வேறு ஒருவருக்கும் தெரியக் கூடாது. தங்களை ஒன்று வேண்டுகின்றேன்: சிலதினங்கள் வரைக் கொரேசேனனைத் தாங்கள் பார்க்க வேண்டாம். அவன் தங்களைக் காண விரும்பினாலும், 'சரிப்படவில்லை' என்று ஏதேனும் போக்குச்சொல்லி அனுப்பிவிட வேண்டும்.

மோ. இதுதானா பிரமாதம்? அப்படியே செய்கின்றேன்.

குண. (ஆச்சரியத்துடன்) உண்மைதானா?

மோ. சத்தியமாகச் சொல்லுகின்றேன். அப்படியே ஆகட்டும்.

குண. இப்போதைக்கு இவ்வளவே போதும். பிறகு தாங்கள் செய்யவேண்டியது இன்னதின்னதென்று, அந்தந்த சமயத்தில் சொல்லுவேன்.

மோ. சரி, கொஞ்சம் காரியமிருக்கின்றது. நான்போய் வருகின்றேன்.

குண. அம்மா! நான்சொன்ன ஒவ்வொன்றும் ஞாபகமிருக்கட்டும்.

[மோஹனா போகிறாள்.]

நான் இம்மட்டிலும் அதிர்ஷ்டசாலியே! உள்ளபடியே குற்றவாளி கொரேசேனனென்று நிரூபித்து விட்டால், எல்லா உண்மைகளும் வெளியாகிவிடும்—ஆம், ஆம். என் தமையனார் மீதுள்ள பழியும் நீங்கும்; என்காதலர் நிரபராதி என்பதும் வெளியாகும்.

"ஏதும் தெரியாது எனைமறைத்த வல்லிருளை
நாத! நீ நீக்கவொரு ஞானவிளக் கில்லையோ,"

குத்துண்ட என்தந்தை குணமடைவரென்று வைத்திய விபுணர் கூறியது, அவர்பிழைத்து விட்டது போலவே மட்டற்ற மகிழ்ச்சியைத் தருகின்றது. எல்லாம் ஈசன் செயலே'

காட்சி முடிகின்றது.

(இன்னும் வரும்.)

K. வேங்கடராமையர்.

ஆத்திசூடி வெண்பா.

(294-ஆம் பக்கத் தொடர்ச்சி.)

வில்லா சிரியன் வியப்பத் தருவி(ன்)இலை
எல்லாம் ஒருகணையின் எய்ததுவும்,—கொல்விடநீர்
உண்ணசையால் மாய்ந்தவர்கள் உய்ந்ததுவும் எண்ணெழுத்
எண்ண் எழுத்திக ழேல். [தால்.

[(உரை) வில்லாசிரியன்–தனுர்வேத போதகராக குருகுலத்திலிருந்த துரோணாசாரியனும்,வியப்ப–அதிசயிக்கும்படி,தருவின் இலைஎல்லாம்–விருட்சத்திலுள்ள இலைகள் முழுமையும், ஒருகணையின்–ஒரேபாணத்தில், எய்ததுவும்–துளையுண்டாகும்படி (விஜயன்) செய்ததும், கொல்விடநீர்–நச்சுப் பொய்கையின்ஜலத்தினை, உள்நசையால்–தாகவிடாயினால் ஆராயாமல் உண்ணச் சென்றருந்தி, மாய்ந்தவர்கள்–உயிர் துறந்த தருமன் ஒழிந்த தம்பிமார் நால்வரும், உய்ந்ததுவும்–பின்பு உயிர் பிழைத்ததும், எண் எழுத்தால்–கணிதத்தாலும் எழுத்தறிவினாலுமே. (ஆதலின்) எண் எழுத்து இகழேல்–கணிதசாஸ்திர அறிவையும், எழுத்தறிவையும் இகழ்ச்சி செய்யாதே.

குருகுலத்தில் பாண்டவர்களும் துரியோதனாதியரும் துரோணாசாரியரிடம் வில்வித்தை கற்று வரும் நாளில், துரியோதனன், பாண்டவர் மீது ஆசிரியர்அன்பு பாராட்டி, அவர்கட்கு ஒருவகையாகவும், தங்கட்

---

*"நங்ங் களம்அறுப்பாம் ஙாம்" என்பதில் உள்ளது போல் ணகர வொற்று அளபெடுத்துளது.

ொரு வகையாகவும், பாரபட்சமாகப் போதிப்பதாகத் தந்தையிடமும், பிதாமகராகிய பீஷ்மரிடமும் கோட் சொல்லினன். அதுகண்டு துரோணர் அந்தச் சந்தேகத்தை யகற்றக் கங்கையாற்றிற்கு மாணாக்கர் அனைவரையும் அழைத்துக் கொண்டு ஸ்நானத்திற்குப் புறப்பட்டார். புறப்படும் போது, அருச்சுனனை யழைத்து, அரண்மனைக்குச் சென்று, எண்ணெயும் நலங்கும் கொண்டு வரும்படிக்கும், அப்படிக் கொண்டு வரும் போது, அவைகளைப் பூமியில் வைக்காமல் எடுத்து வரல் வேண்டுமெனவும், உத்தரவு செய்துவிட்டு ஏனைய மாணாக்கர்களுடன் செல்லும் வழியில், ஒரு பெரிய ஆலமரத்தினைக் கண்டு, அதன்கீழ் ஒரு சக்கரம் எழுதி, அதில் பீஜாட்சரங்களையும் அமைத்து, அதனைத் துரியோதனனுக்கு உபதேசித்து, அவனை நோக்கி, "இதை உச்சரித்துக் கொண்டு நீ ஒரு கணை தொடுத்தால் இம்மரத்திலுள்ள இலைகள் யாவும் ஒவ்வொரு துளை உடையனவாகும்" என்று கூறினார். அவனும் அவ்வாறே செய்து மகிழ்ந்தான். துரோணர் அந்த சக்கரத்தையும் அக்ஷரங்களையும் அழித்து விடாமல் வைத்து அவர்களை அழைத்துக் கொண்டு நதியை யடைந்தார். எண்ணெய் வட்டிலும் அரைப்பும் கொண்டுவந்த அர்ச்சுனன், வழியில் நிற்கும் மரத்தின் இலைகள் யாவும் ஒவ்வொரு துளைபெற்றிருப்பதையும் அதனடியில் வரைந்திருக்கும் மந்திரத்தினையும் கண்டு, இது தன் ஆசான் செய்ததென் றுட்கொண்டு, அவ்வட்சரங்களை மனதில் அமைத்து, அவரைத் தியானித்து, அவர் கட்டளைக்கு விரோதமின்றிக் கையில் உள்ள எண்ணெயும் அரைப்பும் உள்ள வட்டில்கள் இரண்டினையும் ஆகாயத்தில் சுழற்றி வீசி, அவை திரும்பி வருவதற்குள் ஒருகணை தொடுத்து அக் கிண்ணங்களைக் கையில் தாங்கிக் கொண்டான். மரத்தின் இலைகள் இப்பொழுது இரண்டிரண்டு துளைகள் பெற்றன. அர்ச்சுனன் மகிழ்ந்து நதிக்கரைக்குச் சென்றான். ஆயினும், அவன் தான் செய்ததைக் கூறவில்லை. பிறகு ஆசான் திரும்பி வருங்கால் ஒரே துளை இருந்த இலை ஒவ்வொன்றிலும் இரண்டிரண்டு துளைகள் இருக்கக் கண்டு, யாவரையும் காரணம் கேட்க, அர்ச்சுனன், உண்மையாய் நடந்ததைக் கூறினான். அர்ச்சுனனுக்கு இயல்பாகவே கணிதத்தில் இருந்த அரிய மேதைக்கு அனைவரும் வியந்தனர். "இத்தனை நொடியில் கிண்ணம் சென்று திரும்பும். இத்தனைநொடியில் சரந்தொடுத்து அவைகளை ஏந்தலாம்" என்கிற நிர்ணயம் ஒன்றுமில்லையேல், இதனைச் செய்தல் இயலுமா? தீவிர கணிதப் பயிற்சியில்லார் போர்முனைக்கு நன்மைதரத் தக்கவருமாகார் என்பது வெள்ளிடை. இத்தகைய விற்போரிற் கணித நிர்ணயம், அருச்சுனன் இராமன் ஆகிய இருவரிடத்திற்றான் நன்கமைந்திருந்ததாக நாம் காண்கின்றோம். ஆகவே, உலகிற் புகழுடம்பு கொண்டு அழியாதென்றும் பொலியும்படி செய்தது அன்னாரது அரியகணிதப் பயிற்சியேயன்றிப் பிறிதில்லை. அதுபற்றியே நமது ஒளவையார் எண்ணைக் "கண்" என்றார்.

இனி, எழுத்தின் பெருமையைப் பற்றி ஈண்டு குறித்த சிறு குறிப்பு யாதெனில்:—பாண்டவர் வனவாசம் செய்கையில் துரியோதனனது தூண்டுதலினால் காளமா முனிவன் செய்த ஓம குண்டத்திற் றோன்றின பூதத்தினுக்கு இரையாகாமல் இவர்களைத் தப்புவிக்கும் கருணையினால், யம தருமராஜன் உண்டாக்கிய விஷநீர்ச் சுனையில், ஜலத்தினை அருந்திய தம்பிமார் மூவரும் உயிர் துறந்து கிடப்பதைக் கண்ட வீமன, இத்த

விவரத்தை மணலில் வரைந்து விட்டுத் தமையனாராகிய தருமர் உயிர் துறவாமல் இருக்கும்படி விரும்பித் தானும் அம் மடுவின் புனலை யுட்கொண்டு இறந்தான். பின்னர், தருமர் வந்து தேடிப்பார்க்கையில்; வீமனால் வரையப்பட்ட வாக்கியங்களைக் கவனித்து, நடந்தமை யுணர்ந்து, தானும் அப்புனலைப் பருகி யிறக்கத் துணிந்தபோது, தரும தேவதை தடுத்து, சில கேள்விகளுக்கு விடைபெற்று, ஒரு மந்திர வலிமையால் இறந்தோரை எழுப்பும்படி அநுக்கிரகித்தா ரென்பதே. இறக்குந் தறுவாயில் தன்னைத் தனிமையான காட்டில், உற்றிடத் துதவும் உயிர்த்தோழன் போல எழுத்துக்களின் வரி வடிவமன்றோ தருமருக்கு நிகழ்ந்தன வுணர்த்த வல்லதாய், உயிர் பிழைக்கச் செய்யும் ஔஷதியு மாயிற்று. உரைநூற் புலவர்கள், 'எழுத்து' என்பதற்கு 'இயற்றமிழ்' என்று சுட்டி, விசேடவுரைகூறி யிருப்பினும், சாதாரணமான வரி வடிவங்கட் குள்ளபெருமையையும் அதனால் விளையும் நன்மையையும் இளைஞர்களும் எளிதிலுணர மேற் காட்டிய உதாரணமும் சால்புடைத்தாம் என்று அறிக. எம தன்னையார், "எண்ணையும் எழுத்தையும் பிரிவுபடக் கற்பது கூடாதென்பது" தோன்றவே, நீதிவாக்கியத் தொடரில ஒன்றின் கண்ணேயே அமைத்தாரென்பதும் நுட்பக் கருத்தாம். அது பற்றியே, அவ்விரண்டினையும் ஈண்டமைத்த வெண்பாவிலும் பிரிவுபடாது ஒன்றிலேயே யமைத்தமை உரித்தெனவும் கொள்ளல் வேண்டும்.

அசலாம்பிகையம்மாள்.

சாணக்கிய ஸாஹஸம் என்னும்

சந்திரகுப்த சரித்திரம்.

(334–ஆம் பக்கத் தொடர்ச்சி.)

சேனை யாவும் சென்றதும், நந்தர்கள், தம் முன் நின்ற கபட தூதர்களை நோக்கி, "காசி மார்க்கத்தில் பீரங்கி சத்தம் கேட்கக் காரணம் யாது?" என, அவர்கள், "மலயகேதுவைச் சிறைப்பிடித்து விட்ட சந்தோஷத்தால் எங்கள் சேனையாட்கள் பீரங்கிகளை வெடி தீர்த்தார்கள்" என்றார்கள். இதற்குள் (கபட) மலயகேதுவை ஒரு மூடு பல்லக்கில் உட்கார்த்தித் தக்க பாதுகாப்புடன், கண்டோர் யாவரும் 'இது காசி ராஜன் சேனையே' என்று கருதிக் களிக்கும்படியாக, ஒரு சேனை ஆயுதந்தரித்து வந்து கொண்டிருந்தது. அப்பொழுது மறுபடியும் கபட தூதர் ஓடிவந்து, "ஸ்வாமிகளுக்கு "ஜயம்! ஜயம்!" காசி ராஜர் மலயகேதுவைப் பிடித்துப் பல்லக்கில் இருத்தி, ஆயுதவீரர்களைக் காவல் செய்ய நியமித்து, ஸகல சேனைகளையும் இப் பல்லக்கைச் சூழ்ந்து வருமாறு ஆக்ஞாபித்துத் தாம் பிந்தி வருகின்றார்" என்னலும், நந்தர்கள் சந்தோஷித்து ஜய சாலைக்குச் சென்றனர்.

சின்னாழிகைக் கெல்லாம், ஒரு மூடு பல்லக்கு, நந்தர்களிருந்த விடுதிக்கு அருகில் வந்து நின்றது. நின்றதும், காவலாளிகள் அங்கு நின்றுகொண் டிருந்தோர்களை நோக்கி, "மலயகேது" எங்கள் காசிமனனரால் சிறைபிடிக்கப் பட்டுளான். அவனைக் காவலுடன் கொண்டு வந்திருக்கிறோம். நந்த ராஜர்களிடம் ஒப்புவிக்கும்படியாய் உத்தரவாய் இருக்கிறது. தெரியப்படுத்துங்கள்" என்றனர்.

ஆயுத சாலையைக் காத்துக் கொண்டிருந்த தளபதி இதைக் கேட்டு, "நந்த பூபதிகள் இப்பொழுது இங்கில்லை. ஜபசாலையில் இருக்கிறார்கள். மலயகேதுவை நான் பார்க்கலாமோ?" என்று சொல்லிக்கொண்டே பல்லக்கின் அருகிற் சென்றான்.

அவன் செல்வதைக் கண்டு நந்தரது ஆயுத கூடாரத்தைப் பாதுகாததுக் கொண்டிருந்த சைனியம, 'நாமும் சென்று பார்ப்போம்' என்று, தம் கை ஆயுதங்களை அவ் வாயுத சாலையில் வைத்து விட்டுப பல்லக் கருகிற் செல்ல லாயின. பல்லக்குக் காவலர் அந் நிராயுதரை நோக்கி "யாவரும் சேர்ந்து வாருங்கள். ஒரே முறைதான் பல்லக்குத் திறந்து காண்பிக்கப்படும்" என்று சொல்லி, ஜப சாலையை நோக்கிச் செல்லும்போதே, பல்லக்கின் திரையைச் சற்று விலக்கி, "இவனே மலயகேது. பார்க்க விரும்புவோர் பார்க்கலாம்" என்று சொல்லிக் கொணடே நடந்தனர் ஜபசாலையை நெருங்கிப் பல்லக்கு வந்ததும், பல்லக்கிற்குப் பின்புறம் வந்து கொண்டிருந்த கபட சைன்யங்கள் கூடாரத்தில் நுழைந்து, அதைக் கொள்ளையிட்டு, அங்கு இருநத ஆயுதங்களில் தமக்கு வேண்டியவற்றை எடுத்துக் கொண்டு, மிகுந்திருப்பவைகளை ஒடித்து அகழில் எறிந்து விட்டுப் பல்லக்குச் சென்ற விடத்தை நோககிச் செல்லலாயினர். அப்பொழுது பல்லக்குடன் மலயகேதுவைக் காணச் சென்ற நந்தர்களது தளபதி, தனது சேனைகளுடன் நிராயுதனை ஆயுத சாலை நோக்கித திரும்பி வரக கண்டு, அவர்கள் அவனையும் அவனது சைனியத்தையும் வாள் வீசிக்கொன்று, பல்லக்கை நெருங்கி வந்து விட்டார்கள்.

பின்னல் பர்வதேச சைன்யம் பிரமாதமாக வந்து கொண்டிருந்தது. பல்லக் காட்கள் தமது மூடுபலலக்கை ஜபசாலைக்கு முனபாக இறக்கி, "நநத பூபதிகளுக்கு ஜயம்! இதோ மலயகேதுவைக் கொண்டு வநது விட்டோம்" என்று கூவினர். உளளிருந்த நந்தர்கள் இது கேட்டு, வெளியில் வநதனர். பல்லக்கில் உட்கார்ந்திருப்பவன் மலயகேதுவே என்று எண்ணி, "ஏனப்பா, மலயகேது! புத்தி யீனத்தால அன்றோ நீ இவ்விதம் சிறைப்பட வேண்டிய தாயிற்று" என்று நந்தர்களில் மூத்தவன் கேட்க, கபட மலயகேது, பல விதமாக, கேட்போர் மனம் கரைந்து உருகும்படி

வெகுநாழிகை பேசினன். இதற்குள், நந்தர்களது ஆயுதசாலையைக் கொள்ளையடிக்கச் சென்ற தனது சைன்யம யாவும் திரும்பி வந்து விடவே, இக் கபட மலயகேது, திடீரெனத் திரையை நீக்கிக் கொண்டு, கத்தியும் கையுமாகக் கீழே குதித்து நின்று தனது சேனைகளைப் பார்த்துச் சிரித்துக் கொண்டே நின்றான். உடனே ஸகல சேனைகளும், உருவிய ஆயுதங்களுடன் நந்தர்களை நெருங்கிச் சூழ்ந்து நின்றன.

இவை கண்டு ஜேஷ்ட நந்தன் பெருந்திகில் கொண்டு, தனது சகோதரர்களை நோக்கி, "அருமைத் தம்பிகாள்! சிறைப்பட்டவன் கையில் கத்தி எவ்விதம வந்தது? இவன் சற்றும் அஞ்சாது சுற்றிலும் உளளோர்களைப் பார்த்துச் சிரிக்கிறானே! இஃதென்ன ஆச்சரியம்!" என்றான்.

"அண்ணன்மார்களே! இங்கிருக்கும் சைன்யங்கள் தமது கழுத்தில அணிந்திருந்த ருத்திராக்ஷ மாலைகளை அறுத் தெரிந்து, நெற்றியில் இருந்த விபூதியை அழித்துத் தத்தமது ஆயுதங்களை உருவி நிற்பதைப் பார்த்தால், இவாகள் காசி ராஜன் சேனையைச் சேர்ந்தவர்கள் அல்லர்" என்பது வெளியாகிறது. சத்துரு சைன்யமே கபடமாக இவவிதம் வந்து சூழ்ந்து கொண்டு உள்ளது. இங்கிருக்கும் சொற்பப் பரிவாரத்தைக் கொண்டு நாம் என்ன செய்யக் கூடும்! ஐயோ! முன்பு அர்ச்சுனனைப் பிரித்து, அபிமன்யுவை ஸம்ஹரித்தது போல் மகாசூரரான அமாத்ய ராக்ஷஸரைப் பிரித்து இப்பொழுது நம்மை இவ் ஆபத்திற்கு உள்ளாக்கியது தெய்வ சங்கற்பமே" என்றான் நந்தர்களில் ஒருவன்.

மற்றொருவன், "ஆபத்தில் தான் சிக்கியும், தைரியத்துடன் அபிமன்யு யுத்தம் செய்து மாண்டது போல், நாமும் சத்துருக்களுடன் தைரியத்தைச் சோரவிடாது எதிர்த்து வீர சுவர்க்கம் அடைவதே கருமம" என்றான்.

வேறொருவன், "அபிமன்யு இறந்தாலும், அவனது மரணத்தைக் கேட்ட அர்ச்சுனன், சயந்தவனைக் கொன்று தனது துக்கத்தையும் கோபத்தையும் தீர்த்துக் கொண்டது போல், நாம் மாண்டு விட்டாலும், ராக்ஷஸர் எப்படியேனும் சநதிரகுப்தனைப் பழிக்குப் பழி வாங்கியே, தபோவனம் செல்வர். இதற்கு ஐயம இல்லை" யென்றான்.

இன்னொருவன் "அர்ச்சுனனுக்குக் கிருஷ்ண சகாயம் பலித்தது. நமக்கோ அமாத்ய ராக்ஷஸர் செய்த தந்திரமெல்லாம் பலியாமற் போயின. ஆதலால் அன்றோ நமக்கு இவ்வாபத்து நேர்ந்துளது? நாம் உயிருடன் இருக்கும்பொழுதே அவரது முயற்சி

பலிக்கவில்லையே. நமக்குப் பிற்காலத்தில் மட்டும் அவரது எண்ணம் எவ்விதம் நிறை வேறப் போகிறது? நாம் மனப்பால் குடிப்பதிற். பயனென்ன?'' என்று ஏங்கினன்.

அதற்குப் பின்னொருவன், ''ஏன் வீண் பேச்சு? நாம் செய்த தீவினையாலும், நம் பரஸ்பர ஒற்றுமையாலுமே நமக்குத் தெய்வபலம் போய் விட்டது. நம் பாபமே இவ்விதம் நம்மைச் சூழ்ந்து கொல்லுகிறது. 'அறிந்து அறிந்து செய்ததை அழுது அழுதே தொலைக்க வேண்டும்' என்ற மெய்ம் மொழியின் உண்மை இன்றே அனுபவ பூர்வமாக நாம் அறிந்தோம். அழுதாற் பயனென்ன? நொந்தாற் பயன் என்ன? ஆவதில்லை. இதோ சத்துருக்கள் மேன் மேலும் பெருகி வந்து விட்டார்கள். ஜயித்தாற் பிழைப்போம். செத்தால் வீர சுவர்க்கம் இருக்கவே இருக்கிறது.'' என்று தேறுதல் கூறினன். உடனே அவ் வொன்பதின்மரும் கச்சையை வரிந்து கட்டிக் கொண்டு யுத்தத்திற்குச் சித்தமாய் நின்றனர்.

அவர்கள் தமது குதிரைகள் மீதேறப் பிரயத்தனம் செய்யும் போது, சத்துரு சேனைகள் அவ் அசுவங்களின் கால்களை வெட்டி வீழ்த்தி, ஜபசாலைக்குட் புகுந்து, அங்கிருந்த பிராமணர்களைத் துரத்தி யடித்து, ஹோம குண்டத்திருநத நெருப்பைக் கொண்டு, ஜபசாலையைக் கொளுத்தின. ஜபசாலை பற்றி எரியும் போது,மாஸோபவாஸி தனது ஜடைகள் புரள, மான்தோல் தரையில் இழுபட விரைவினில் நந்தர்களிடம் வந்து, அவர்களைக் கண்டவாறு பரிகவித்துரைத்து சாணக்யன் இருந்த இடம் நோக்கிச் சென்றான்.

ஜபசாலை எரிவதைக் கண்டு, சேகரன், ''இதுவே சாணக்யர் கூறிய அடையாளம்'' என்று உணர்ந்து, நந்தர்களுக்கு நான்கு பக்கங்களிலிருந்தும் சேனைகள் உதவ விடாது, தனது சேனைகளை நாற்புறத்தும் நிறுத்தினை. நிற்க.

ஜேஷ்ட நநதன் கபட மலயகேதுவைத் தன் கைக் கத்தியால் வீசி அவன்தலையைக் கீழ் உருட்டி சததுரு. சேனை மத்தியிற் பாய்ந்து, வீச்சிற்குப் பத்துப பதினைந்து தலைகளாக வீழ்த்தினன்.

இவ்விதமே பிற நந்தர்களும தாம் ஏந்திய கத்தியைக் கொண்டே சததுருக்களின் ரத கஜ துரக பதாதிகளை நிர்மூலம் செய்து ஆர்ப்பரிக்கவே சத்துருகக்ள் கதறி ஓடினர்.

உடனே சாணக்யன் வெகு கோபம் அடைநது,உத்தரீயத்தை இடுப்பில் வரிந்து கடடிப் பூணூலைக் காதில் மாட்டி, தண்டத்தைக் கையில் ஏந்தி, ''இது வரை நந்த அதமர்கள் நாசமுற விலலை யாதலால் அவர்களை எதிர்ப்போர் யாவரும் கேவலம் பேடிகளே ஆவார் நானே சென்று ஸம்ஹரித்து விட்டு வருகிறேன்'' என்று ஓடினன்.

இது கண்ட சந்திரகுப்தன் அவனைத் தடுத்து, நமஸ்கரித்து, நய மென் மொழிகளால் அவன் கோபத்தைச் சாந்தி செய்து, சர்வாயுதபாணியாகிக் குதிரை ஏறிப் புறப்பட்டான். உடனே, சேகரன் முதலிய சகல சேனாதிபதிகளும் சந்திரகுப்தனுடன் புறப்பட்டனர்.

இதற்குள் ராக்ஷஸனது தூதர்கள், இக் கொடிய காட்சிகளைக் கண்டு, அஞ்சி ஓடிப்போய், தூங்கிக்கொண்டிருந்த ராக்ஷஸனைத் தட்டி எழுப்பி, நிகழ்ந்த யாவையும் கூறினர்.

(இன்னும் வரும்.)

வி. பாலம்மாள்.

சோழவந்தானூர் அரசஞ் சண்முகனார் இயற்றிய

வள்ளுவர் நேரிசை.

331–ஆம் பக்கத் தொடர்ச்சி.

தோராருந் தாம்உணரக் கன்னன் சிதைந்தகளன்
வாரா அழுதாளே வள்ளுவரே!—சூரன்பெண்
அன்பிற்கும் உண்டோ அடைக்குந்தாழ்? ஆர்வலர்
புன்க(ண்)ணீர் பூசல் தரும்.

(அ–ம் முதலியன):— தோரார்–*அறியாதவர்கள்*, *சிதைந்த*–இறந்த, களன்–*போர்களத்தில்*, வாரா–*வந்து*, சூரன் பெண்–*சூரசேனனது மகளாகிய குந்தி தேவி*, ஆர்வலர்–*அன்பர்*, புன்கண்ணீர்–*அற்பக் கண்ணீர்த் துளிகள்*, பூசல் தரும்–(*அன்பை யாவரும் அறிய*) வெளிப்படுத்தும்.

கன்னன் சிதைந்த களத்தில் அறியாதாரும் அறியக் குந்தி அழுதது:— *தன் தந்தை கட்டளைப் பிரகாரம் குந்தி துர்வாசர்க்கு ஏவல்புரிந்து அவரை மகிழ்வித்ததும் திரிகாலமும் உணர்ந்த அவர், இனி அவட்கு நிகழ இருக்கும் துர்ப்பாக்கியத்தை உணர்ந்து, அவள் மீது கருணை கூர்ந்து, நியானித்த மாததிரத்தில் பிரசன்னமாகி மககட்பேறு அளிக்கத் தகக மந்திரோபதேசம் செய்ததும், அம்மந்திரத்தைச சோதித்தறியக் கருதி அவள் கன்னிப்பருவத்திலேயே அதனை ஜபித்து, சூரியனைக் கருத, அவன் அருளால் கன்னனைப் பெற்றதும், வள்ளுவர் நேரிசை 3-வது அதிகாரம் 8-வது செய்யள் விஷயததை விளக்கக் கூறியுள்ள செய்தியால் யாவரும் அறிவர். கன்னனைக் குந்தி கனனிப் பருவத்திற் பெறறமையின், அவள் நாணி, அபவாதத்திற்கு அஞ்சி, எவரும் அறியாமல் அவனை ஓர் பேழையில் இட்டு, யமுனையாற்றில் விட்டனள். இஙஙனம் விடப்பட்ட கன்னன் அரமனைத் தேரோட்டியால் எடுத்து வளாக்கப்பட்டு, அஸ்திர சஸ்திர வித்தையில் தேர்ந்து, துர்யோதனனது உயிர்த்தோழனாயினன். கொடை*

யைப் பிறவிக்குணமாகக் கொண்ட இவன் தன்னுடைய மகன் என்று குந்திக்கும் தெரியாது. ஸ்ரீ கிருஷ்ணன் ஒருவனே இவனது உண்மை வரலாறு அறிந்தவன். அர்ச்சுனனைக் காக்க நாகக்கணையை அவன் மீது ஒருமுறைக் கதிகம் விடக்கூடாதென்றும், பாண்டவர் கட்சியிற் சேர வேண்டும் என்றும் கன்னனைக் கேட்டு வருமாறு குந்தியை ஸ்ரீகிருஷ்ணன் அனுப்பநேர்ந்த சமயத்தில் தான், அவளுக்கு அவனைப் பற்றிய உண்மை ஸ்ரீகிருஷ்ணனால் அறிவிக்கப் பட்டது. குந்தி கன்னனிடம் சென்று, அர்ச்சுனனைப்பற்றிய வரமொன்றே பெற முடிந்தது. கன்னன் அப்பொழுது அவளை நோக்கி,

"அன்னே! நீ வேண்டிற்றுப் பெற்றாய்; அது தந்தேன்
உன்னை நான் வேண்டுவதிங்(கு) ஒன்(று)உண்டு:—பின்னை
அலர்கதிர்வேற் கையான் அருச்சுனனைப் பட்டால்
முலைதருக பல்லரசர் முன்பு."

நான் அநாதைப்பிரதேம் என்றாவது இழிகுலத்தான் என்றாவது எவரும் எண்ணாதிருக்குமாறே இவ்வரம வேண்டுகிறேன்", என்று சொல்லி முடிக்குமுன் அவள் புத்திரவாஞ்சை மேலிட்டுக் கண்ணீர் விட்டுக் கதறலாயினள். அப்பொழுது அவளைத் தேற்றித் "தாயே! அழுதாற் பயனென்ன? நொந்தாற் பயனென்ன? ஆவதில்லை.

பாரதத்துட் பட்டேன் படையின், பாண்டவர்பால்
ஆதரித்து நான் வருவேன் ஆரணங்கே!—சீர்மிகுத்(த)உன்
பொற்கமல பாதம் புரிகின்றேன் போஎன்றான்
நற்றவத்தின் மிக்கோன் நயந்து.

அழுதகண்ணொடும் சிந்திய மூக்கொடும் சென்ற குந்தி கன்னன் போர்க்களத்தில் மடிந்த விஷயம் கேட்ட அக்ஷணமே புத்திரவாஞ்சை மேலிட்டும், அவனுக்கு அளித்திருந்த வாக்குப்பிரகாரமும், இறந்த அவனைத் தன் மடி மீதிருத்தி,

"பொங்குமுலைப் பாலூட்டிப் பூந்தடங்கண் மையெழுதி
மங்கையர்கள் பாராட்ட வளராதே—எங்கோமான்!
பா(ல்) நாறும் இன்சொற் பவளவாய் இன்னமுதை
யான்ஆறப் பெற்றிலனே ஆங்கு."

"என்றேஎன் தாதைஉழைக் கன்னி மாடத்(து)
எழில் இரவி திருவருளால் ஈன்றேன்.! ஈன்ற
அன்றேபொற் பெட்டகத்தில் கங்கை யாற்றில்
ஆ(ம்) முறையால் உனைவிடுத்தேன். அருளி லாதேன்!
வென்றேமண் கவர்தருமன் மதலைக்(கு) ஆவி
மித்திரனு னதுகேட்டுன் வீரம கேட்டு
நன்றேஎன் தவப்பயன்என் றுன்னி வாழ்ந்தேன்
நாகமும் நீ அரசாள நடக்கின் றாயோ!"

"ஓரஞ்சு பேர்அருளால் அறம் தவாத
உதிட்டிரனாதியர்உரகக் கொடியோ னாதி
ஈரஞ்சு பதின்மருளர் தம்பி மார்கள்
இங்கிதங்கள் அறிந்தடைவே ஏவல செய்யப்
பாரஞ்சும் ஒருகுடைக்கீழ் நீயே யாளும்
பதம் அடைந்தும் விதிவலியாற் பயன் பெறாமல்
காரஞ்சு கரதலத்தோய்! அந்தோ! அந்தோ!
கடவுளர்தம் மாயையினாற் கழிவுற்றாயே!"

என்று கதறினள்" என்பதே.

யார்க்(கு)ஆம் இவறியான் செல்வம்? இகல்வெல்ல்
மாற்(கு) அளித்தான எனபுமுனி வள்ளுவரே!—பார்க்குங்கால்
அன்பிலார் எலலாம் தமக்குரியா; அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு. (௨)

(அ-ம் முதலியன):— இவறியான்-உலோபி. இகல்-பகை (வனை விருத்திராசுரனை), மாற்கு-இந்திரனுக்கு, என்பு-எலும்பு, முனி-ததீசிமுனி, எல்லாம்-எல்லாப் பொருளாலும், என்பும்-தமது உடம்பாலும்.

மாலுக்கு முனி தன் எலும்பு அளித்தது:—சிவபக்தியிற் சிறந்த ததீசி முனிவர் தாம குணமும், தூய சிரத்தையும் வாய்ந்த ஓர் தபோதனர். பாற்கடல் கடையத் தேவாசுரர்கள் சென்ற காலையில், தங்கள் ஆயுதங்களை இம் முனிவர்பால் ஒப்பித்துவிட்டுச் சென்றனர். சென்றோர், பன்னெடுங்காலம் அவற்றிற்காக வரவேனும் ஆள்விடவேனும் இல்லாமையின், அம்முனிவர் அதனை விழுங்கி நிஷ்டையில் அமர்ந்தனர். சின்னாட்களுக்கெல்லாம் அவ் ஆயுதங்கள் அவரது முதுகந் தண்டோடு முதுகந்தண்டாய் விட்டன. நிற்க.

இந்திரன் விருத்திராசுரனைக் கொல்வதற்குத் தன்கை வச்சிராயுதம் வலியற்றதெனக் கண்டு விசனித்ததைத் திருமால் அறிந்து, அவனை நோக்கி, "நீ இக்ஷணமே ததீசி முனிவரிடம் செல். தேவாசுரரது ஆயுதம் யாவும் இரண்டறக் கலந்ததால் ஆக்கப்பட்டதாகும் அவரது முதுகெலும்பு. அதனினும் வலியுள ஆயுதம் வேறில்லை. ததீசி முனிவர் தனக்கென வாழாப் பிறர்க்குரியாளராதலின் அதனைக்கேட்கு முன்னர் பலர் நலம் கருதி ஈவர்" என்னலும, இந்திரன் அவ்வண்ணமே முனிவரிடம் சென்று யாசித்தனன். உடனே முனிவர் அக மகிழ்ந்து தம் பிராணவாயுவை எழுப்பிப் பிரமரந்திர வழியாக உடம்பை யகன்று, முதுகெலும்பு ஈந்து முத்தியடைந்து தம் புகழுடம்பை என்றும் நிலை நிறுத்தினர்" என்பதே.

மான்பிறப்பில் எல்லாம் உணர்ந்(து)ம் அன்பு வாய்ப்ப, மக்கள்
வான்பிறப்புற் றான் பரதன் வள்ளுவரே!—வான்புகலும்
அன்போ(டு) இயைந்த வழக்(கு) என்ப ஆருயிர்க்கு
என்போ(டு) இயைந்த தொடர்பு. (௩)

(அ-ம் முதலியன).—வாய்ப்ப-அடைந்த காரணத்தால், மக்கள் வான் பிறப்பு-சிறந்த மனித ஜன்மம் உற்றான்-அடைந்தான், பரதன்-ஜடபரதன்

வான்புகலும்-மேலாகச் செல்லப்படும், இயைந்த-பொருந்துதற்கு வந்த, வழக்கு-வழியின் பயன், ஆருயிர்க்கு-பெறுதற்கு அரிய மனிதர் உயிர்க்கு, என்ப-என்று அறிந்தோர் கூறுவர்.

ஜடபரதன் வரலாற்றை வள்ளுவர் நேரிசை 3-வது அதிகாரம் 10-வது செய்யுளை விளக்கக் கூறிய செய்தியால் அறிக.

தாய் சொற்றும் தம்பியர்பாற் சாரா(து) அராக்கொடியோன்
வாய்நண்பு மிக்கானே வள்ளுவரே!—தூயகன்னன்
அன்(பு) ஈனும் ஆர்வ முடைமை. அதுஈனும்
நண்(பு) என்னும் நாடாச் சிறப்பு. (௪)

(அ-ம் முதலியன்)— தாய்சொற்றும்-மாதாவாகிய குந்தியே வற்புறுத்திக் கூறி அழைத்தும், அராக்கொடியோன்-பாமபுக் கொடி பிடித்தவனை-துரியோதனன், வாய்-பெற்ற, நண்பு-சிநேகம், அன்பு-மனைவிமக்களிடம் வைக்கும் அன்பு, ஈனும்-தரும், ஆர்வம் உடைமை-பிறரிடம் ஆசையுடனிருத்தல், அது-அவ்வாசையுடன் இருத்தல், நாடா-அளவிறந்த.

☞ தாய் சொற்றும் தம்பியர்பாற் கன்னன் சாராது அராக்கொடியோன் பால் நண்பு கொண்டது பிரசித்தம்..

சிற்றின்பம் நீங்கினர்க்கே பேரின்(பு) எனச் சொலும்நூல்
மற்றிரண்டும் நீயிருந்தீர் வள்ளுவரே!—எற்றுனோ?
அன்புற் றமர்ந்த வழக்(கு)என்ப வையகத்(து)
இன்புற்றார் எய்தும் சிறப்பு. (௫)

(அ-ம் முதலியன்):—இரண்டும்-சிற்றின்பமும் பேரின்பமும், எற்றுனோ?-எதனாலோ? அமர்ந்த-(இல்லறத்தோடு) பொருந்திய, வழக்கு-வழியின் பயன், இன்பு உற்றார்-(இல்வாழ்க்கையில்) இன்பத்தை அனுபவித்தவராகி, எய்தும்-(பின்பு விண்ணுலகத்திற் சென்று) அடையும்,சிறப்பு-பேரின்பத்தை.

"இவ்வுலகில் இல்வாழ்க்கை யின்பம் அனுபவித்தவராகி, பின்பு விண்ணுலகிற் சென்றடையும் பேரின்பத்தை, "அன்புடையோராய், இல்லறத்தோடு பொருந்திய வழியின் பயன்" என மேலோர் கூறுவர்" என்பது வள்ளுவர் குறளின் கருத்து. வாசுகி அம்மையுடன் அவர் இல்லறம் நடத்திப் புகழுற்றதை அறியாதார் சிலரே. அவ்வம்மையின் பிரிவாற்றாது அவர் இரங்கிக் கூறிய

அடிசிற் கினியாளே! அன்புடையாளே!
படிசொற் கடவாத பாவாய்!—அடிவ்ருடிப்
பின் தூங்கி முன்எழுந்த பேதையே! போதியேர்
என் தூங்கும் என்கண் இரா.?"

என்ற செய்யுளே அவள் நற்குணம் நிறைந்த கற்புடைப் பெண் என்பதை விளக்கப் போதியதாகும்.

(இன்னும் வரும்.)

ம. கோ

விடுகதை வினாவுக்கு விடை.

அக்கரம் மூன்றில் அமைந்தசொல் 'மதுரை'
அதிற்கடை எழுத்தகன் றொழிந்தால
தக்கவர் மனத்தைத் திரும்பெனச் சுழற்றும்
தகுதியில் பொருளது 'மது' வாம்;
நக்கனர் காத்தில் வைத்தது 'மரை' யாம்
நடுஎழுத் தில்லெனில், மற்றும்
மக்களிற் பெரும்பேர் 'துரை', முதல் எழுத்து
மறைந்திடின். ஈதுாண் கறியே. (1)

சு. நல்லசிவன் பிள்ளை.

'அக்கரம் மூன்றில் அமைந்தசொல்' என்றகவிக்
கொக்கவிடை ஈதுவிவே கோதபமே!—மிக்க
மதுரத் தமிழ்வளர்த்த மாசங்கம்மேவும்
மதுரைப் பதியதுவே மற்று. (2)

அ. நாராயணரெட்டி.

விநோதக் கூற்று.

*"மாண்டார் பிழைப்பாரோ மாநிலத்தீர்!" என்ற புலவன் ஒருவனைப்பார்த்து, அவனது மாணவன், "என்ன ஐயா சந்தேகம்? இறந் தோரும் உயிர் பிழைத் திருக்கின்றனர். பெரியோரும் தவறிழைத்திருக்கின றனர். உமக்கு உதாரணம் வேண்டுமா?

*"மாண்டார் பிழைப்பாரோ" என்பதற்கு இறந்தோர்பிழைப்பரோ" என்றும்,"பெரியோர் தவறு செய்வரோ" என்றும் இருபொருள்உண்டு.

மறலி ஆவி பெற்றதும், மதன் அனங்கன் ஆனதும்
மாதவர்க்குக் கரியதான மைந்தன் மீண்டும் வந்ததும்;
திறல் இராமன் வாலிதன்னைத் தீர்த்ததும், உதிட்டிரன்
தீய்சூதும், வேதன் பொய்யும் தேர்ந்திலாத தென்னையோ?''

என்றான்.

P. ராமகிருஷ்ணையர். B. A.

---

*பெண்மக்கட் குரிய படிப்பு.

[*இது 1917-வருஷம் ஜனவரி மாதம் 28-தேதி நடைபெற்ற தேவ கோட்டை ''வைசிய சிவானந்த சபை''யின் நான்காம் வருட பூர்த்திக் கொண்டாட்டத்தில், அவ்வூர் டிப்டி கலெக்டர் ஸ்ரீ: ராவ்பகதூர் டி.என்.சிவ ஞானம் பிள்ளையவர்கள் அக்கிராசனத்தின் கீழ் உபந்யஸிக்கப்பட்ட விஷ யத்தின் சாராம்சம் ஆகும்.]

அன்பிற் சிறந்த ஆரிய சகோதரிகளே! அறிவிற் சிறந்த சகோ தரர்களே! கற்றுநிறைந்த பல வித்வ சிரோமணிகளால் அலங்கரிக் கப் பெற்று விளங்கும் இச் சபையில், அறிவினும் படிப்பினும் அனு பவத்திலும், அறச் சிறியவளாகிய என்னையும் ஏதேனும் ஒரு விஷ யம் பேசச் சொல்லவது, தற்காலம் ஸ்திரீகளின் அபிவிருத்திக்கான காரியங்களில ஜன ஸமூஹத்தார்களுக் கேற்பட்டிருக்கும் பெரு முயற்சியையும் ஆதரவையும எடுத்துக் காட்டுகிற தென்றே எண் ணுகிறேன்.

இதுகாறும் 'அவசியம் தானே' என்று சர்ச்சை செய்யப் பட்டு வந்த 'பெண்கல்வி' விஷயமானது, ஸர்வேச னருளாலும், படித்த சகோதரர்களின் விடா முயற்சியாலும ''அவசியம் தான்'' என்று உறுதி செய்யப்பட்டிருப்பதுடன், அப் பெண்கல்வி முறை யானது 'எவ்விதமிருந்தால் கூடிய சீக்கிரம பயனளிக்கக் கூடு'மென் பதாக ராஜாங்கத்தாராலும ஜனஸமூஹத்தாராலும ஆராய்ச்சி செய் யப்பட்டு வருவதும எல்லோரும அறிந்த விஷயமே.

உலக சிருஷ்டியில் விளங்கும் ஆன்ம ராசிகளில் எப்பொழுதும் ஒற்றுமையுடனும் மனச் சமாதானத்துடனும் இருந்து சகல காரி யங்களையும் நடத்தி வர வேண்டியவர்களாக இருக்கும் ஆண்பெண், என்ற 'இருவகுப்பினரும்' க்ஷேம லாபங்களிலும, அபிவிருத்தி யிலும், ஸமமாகப் பங்குபெற் றிருக்கின்றனர். ஆயினும் அவர்கள் தங்களுடைய சரீர அமைப்பைப் போலவே வேறு பல விஷயங்களி லும் மாறுதலான நிலைமைகளை யடைந்திருக்கிறார்கள்: குடும்ப

பாரத்தைச் சரிவர நடத்துவதில் சமமான பொறுப்பும், ஆராய்ச்சியும் நிலைமையும் கொண்டு நிர்வாகம் செய்ய வேண்டிய வழியில இவர்களால் அப்பியாசம் செய்யப்படும் விஷயங்கள் வெவ்வேறாக வே இருந்து கொண்டிருக்கின்றன.

'கல்வி' என்பது 'ஆண்', 'பெண்' என்ற இருவகுப்பினருக்கும் நல் அறிவை விருத்தி செய்ய அத்யாவசியமாயிருக்கிறது. ஆயினும ஆடவர்களின் கல்வி, பெரும்பாலும் ஜனஸமூகத்தாரின் நன்மைக்கும, பெண்பாலரின் கல்வி முழுதும், குடும்பக் கிரமத்திற்குமே மிக உபயோகமாகவும் ஆதாரமாகவுமிருந்து கொண்டிருக்கிறது. குழந்தைகளைப் பாதுகாககும் விஷயங்களும் வித்தியாப்யாஸக் கிரமங்களும் பெற்றோர்களின் ஆதீனத்திற் குட்பட்டிருப்பினும், தமது பெண்குழந்தைகளைப் படிப்பிக்கும் முறையில் இவர்களுக்கிருக்கும் சுதந்திரம் மிகவும் குறைவேயாம். சௌகரியங்களும் அவ்விதமே யாகும். ஆண்பாலர்களுக்குக் கட்டாயப் படிப்பு ஏற்படாத வரையில், தமது பெண்குழந்தைகளின் படிப்பில் உள்ள உன்னத ஸ்திதியைப் பற்றிப் பெற்றோர்கள் நிதானிப்பது முடியாத காரியம்.

நவ நாகரீக முறையை யனுசரித்துப் படித்துத் தேறிய பெண்கள் அதனால் ஏற்படுமென்று நிச்சயித்திருந்த பிரயோசனங்களைச் சற்றுமடைய முடியாத நிலைமையிலிப்பொழு திருப்பது நாம் அறிந்த விஷயமே. ஒருவிதக் கவலையும் இடைஞ்சலுமின்றிப் படிக்கக் கூடிய ஆடவர்களுக்கே இக்காலத்தில் 'பீ யே டிகிரி' வாங்தும்போது குறைந்தது 22-வயதாய் விடுகிறது அவ்விதமிருக்க, 14-வயதிலிருந்தே குடும்பக் காரியங்களில் பிரவேசிக்க வேண்டியவர்களான பெண்கள் அவ்விதப் படிப்பின் முறையை யனுஸரித்தலும், சீக்கிரம் பயிற்சி பெறுதலும் ஸாத்தியமாத லெங்ஙனம்? பெற்றோர்களால் சற்றும் தீர்மானிக்க முடியாததாயும், சிறுமியர்களால் முழுதும் பயிற்சி பெற முடியாததாயும, முழுதும் படித்துத் தேறுவதில் சௌகரியமும் அவசியமும் படைத்த பெண்களுக்கும் தக்க சௌகரியங்களில்லாமலுமிருக்கும் இககாலத்திய பெண்கல்வி முறையில், நாம் இப்பொழுது ஒற்றுமையுடனும நிதானத்துடனும முக்கியமாயும் ஆராய்ச்சிசெய்ய வேண்டிய விஷயம் "பெண்மக்கட்குரிய படிப்பு" என்ற இவ்விஷயமே ஆகும்.

ஆண்பெண் இரு வகுப்பினர்களுக்கும் தமது சுயபாஷையில் தக்க பயிற்சியிருத்த லவசியம். 'அம்மா' 'அப்பா' என்று பேச ஆரம்பிக்கும் பாஷையில் தேர்ச்சியில்லாமலிருக்குமாகில் சுயபாஷாபிமான மென்பது ஏது? பாஷாபிமான மில்லாது தேசாபிமான மெவ்விதம் சித்திக்கும்? பொதுஜன நன்மைகளை நாடுவோர்களென்

றும், ஜன ஸமூஹத் தலைவர்களென்றும் முன்வரும் சிலர், அனேகமாய்ப் பொதுக் கூட்டங்களில் தாம் பேச நேரிடும் போதெல்லாம, அன்னிய பாஷைகளில் பேசிவிடுதல் சற்றும் பொறுத்த மற்றதென்பதாகப்*பிரஸித்தி பெற்ற சுதேசப் பத்திரிகைகளில் பிரஸ்தாபிக்கப் படுவதையும நாம் அடிக்கடி படிக்கின்றோம்.

ராஜாங்கமுறையில் கலந்து உழைக்கும் பொருட்டும், அனேகமாய் ஜீவனோபாயத்தின் பொருட்டும, அன்னிய பாஷை மிகவும் அவசியம் வேண்டிய ஆடவர்களுக்கே சுயபாஷையில் தேர்ச்சி மெத்த அவசியமாயின், பெண்மக்களால் வித்தியாபயியாஸ முறையில் அவர்களுக்கிருக்கும் பலநிர்ப்பந்தங்களையும் அற்ப ஸௌகரியத்தையும் அவசியத்தையும் அனுசரித்துத் தாம் கற்கக் கூடியதும் கற்க வேண்டியதும் சுயபாஷை ஒன்றே என்பதில் ஐயம என்ன? நமது பெண்குழந்தைகளுக்கு அன்னியமாயும் காலாந்தரத்தில் 'ஒருக்கால் பயனளிக்கக் கூடுமோ?' என்று யோசிக்க வேண்டியதாயும்' அனேகமாய் ஆரம்பத்திலேயே நிறுத்திவிட வேண்டியதாயும் இருக்கும் பல படிப்புக்களைப் படிப்பிக்க நாம் முயற்சித்தல் பொருந்தாத காரியம்.

பஞ்சாப் பங்காளம் முதலிய வடதேசங்களிலும், பரதர் மசூலி பட்டணம் விஜயநகரம் போன்ற பலவிடங்களிலும் உள்ள வித்தியாவதிகளான ஸ்திரீகளைக் கவனித்தால் அவர்களடைந்திருக்கும பாண்டித்தியம் அனேகமாய் சுயபாஷையிலென்றே தெரிகிறது. தம்மைத் தாமே ரக்ஷித்துக் கொள்ள வேண்டியவர்களாயும், படிப்பின் அபிவிருத்தியில சுதந்திரம் கொண்டவர்களாயும், ஆங்கிலத்தில் படித்துத் தேறுவதையே அவசியமாகக் கொண்டவர்களாயு மிருக்கும் சிலபெண்களுக்கும் இப்பொழுதைய முறையைக் காட்டிலும சுலபமாயும் முக்யமாயுமுள்ள வழியில், கூடிய சீக்கிரம் அவர்கள் ஆங்கில பாஷையில் பட்டப் பரீக்ஷைகளில் தேறிப் பட்டதாரிணிகளாகும் வழியைத் தேட வேண்டு மென்று பலர் அபிப்பிராயப் படுகிறார்கள். இவ்வழியை யனுஸரித்துப் பூனாவில் ஓர் ஸதிரீகள் காலேஜும் ஏற்படுத்தப் போகிறதாகக் கார்வே என்ற கனவான் பலவிடங்களிலும் பேசி வருகிறார். ஆகையால் எவ்வழியிலும் பெண்மக்களின் படிப்பு கால தேசவர்த்தமானங்களுக் கனுகூலமாக இருக்கவேண்டு மென்பதுடன் அவர்களுக்கு சுயபாஷைப் பயிற்சியே பெற்றோர்களால் நிதானிக்கக் கூடியதும் பயனளிக்கக் கூடியது மென்பதும் விளங்கும்.

பெண்மக்களின் பிரதமப் படிப்பானது கூடிய சீக்கிரத்தில் நெடுநாள் வகிக்க வேண்டியதாயிருக்கும் குடும்ப வாழ்க்கைக்கும், தெய்வகதியில் தானே ஜீவிக்க நேரிடும் ஸமயத்திற்கும் மெத்த

உதவியாக இருத்தல் வேண்டும். இது பற்றிப் பெண்களின் படிப்பில் கைத்தொழிற் பயிற்சியும் ஒன்றாகும்.

இக் கைத்தொழிலானது குடும்ப வாழ்க்கையில் சிக்கனத்திற்கும் ஒருகால ஜீவனதிற்கும் சாதகமாகவிருக்கும். தமது குழந்தைகளின் நீடித்த க்ஷேம லாபங்களையே நோக்கமாய்க் கொண்டுள்ள பெற்றோர்களால் தமது பெண் குழந்தைகளுக்குப் பயிற்றுவிக்கப்படுவதும் பெண் மக்களுக்கு அவசியமுமாகிய படிப்பு சுயபாஷைப் பயிற்சியும் கைத்தொழில் முறைகள் ஒன்றில் அப்யாஸமும் என்றே சொல்வதில் தடையென்ன இருக்கிறது? அவைகளைச் சற்றும் நாம் கவனியாமல் ஆங்கிலத்தில் சர்வ கலாசாலைப் பட்டப் பரீக்ஷைகளுக் காதாரமாகவே ஏற்பட்டிருக்கும் படிப்பை நமது பெண்குழந்தைகளுக்கும் இரண்டொரு வருஷங்கள் மட்டும் படிப்பிப்பதால் அப்படிப்பு ஒருவிதத்திலும் பூர்த்தியடையாமல் போவதுடன், ஓர் பெண்பிள்ளைக்குத் தானாகவே தெரிந்திருக்க வேண்டிய குடும்பக் காரியங்களில் பழகி அனுபவம் பெறுவதற்கும் நேரமில்லாமற் போகிறது. இத்துடன் நமது மதக்கிரந்தங்களை நன்கறிந்து கொள்ள முடியாமலும் போய்விடுகிறது. அன்றியும் இப்பெண்ணிற் கேற்படும் புருஷனுக்கு மனைவி ஆங்கிலம் படிப்பதில் விருப்பமில்லாமல் இருக்குமாகில் குடும்ப வாழ்க்கையாகிய சகடத்திற்குஇரு சக்கரமாக விருக்கும் தம்பதிகளுள், பரஸ்பரம் அபிப்ராய பேதங்களேற்படுவதுடன் சில ஸமயம் மன ஒற்றுமையும் அற்றுவிட ஏதுவாய் விடுகிறது.

நாம் நமது பெண்குழந்தைகளுக்குச் சுய பாஷையில் நல்ல தேர்ச்சியையும் ஒரு சிறு கைத்தொழிலையும் கற்றுக்கொடுப்போமாகில், பிறகு அவர்கள் தக்க வயதடைந்த பின் புருஷனுடைய அனுமதியையும் தமது புத்தி பூர்வமாக ஏற்படும் அவசியத்தையும் பொறுத்து, ஆங்கிலம் கற்பதிலும் பட்டப் பரீக்ஷைகளுக்குப் படிப்பதிலும் தக்க சௌக்கியங்களும் பயனும் கிடைக்கும். கேவலம் பெற்றோர்களின் தீர்மானத்தைக் கொண்டே ஏற்படும் படிப்பானது சுயபாஷையைத் தவிர்த்து மற்றவழிகளில் அபிவிருத்தியடையவும் மாட்டாது. அது நன்மையளிக்கு மென்றும் நாம் நினைக்க விடயில்லை. ஒருபெண்பிள்ளையின் நிலைமை யானது அவளுக் கேற்படும் புருஷனுடைய நோக்கங்களுக் குட்பட்டதாகவும், சிற்சில ஸமயம் தக்க வயதடைந்தபின் அவளுடைய சுயபுக்தியைக் கொண்டே நிதானிகப்படுவதாகவு மிருப்பதன்றி, பெற்றோர்களின் தீர்மானத்திற்கும் ஆதீனத்திற்கும் உட்பட்டதன்று. சுயபாஷையும் கைத்தொழிலுமதான் பெண்மக்கட்கு வேண்டியன என்பதற்கு ஆதாரங்கள் நமது தற்காலத்திய அனுபவத்திலேயே இருக்கின்றன. பூர்வகாலத்திய, "பெண்மணிகளும் தமது குடும்பத்திற்கும் வாழ்

நாளுக்கும் சாதகத்துக்கும் நல் அறிவிற்கும் படித்துவந்ததோடு ஜீவன முறையைக் கைத்தொழில் கொண்டே நடத்திவந்தார்கள்'' என்பதற்கு ஆதாரமிருக்கிறது. இவ்விதமிருக்க, சட்டப், பரீக்ஷைகளுக்கும் நியாய வாதங்களுக்கும் இதர உத்யோக முறைகளுக்கும் ஆதாரமாக விருக்கும ஆடவர்களின் படிப்பின் முறை எங்களுக் கெதற்கு.?

(இன்னும் வரும்.)

வி. பாலம்மாள்.
உப-பத்திராதிபர்.

சிறுவர்க்காகும் கதைப்பூங் கொத்து

(338-ஆம் பக்கத் தொடர்ச்சி.)

கதை—14.

மகன் அருமை மாதாவே அறிவள்.

மகத தேசத்தில் ஹரதத்தன் என்ற பிராமணன் இருந்தான். அவனுக்கு மீனாக்ஷி, காமாக்ஷி, என இரு மனைவியர் உண்டு. மீனாக்ஷி அழகிய குழந்தை ஒன்றைப் பெற்றாள். குழந்தை பிறந்ததும், அதன் பிதா பரலோக மடைந்தான். பிறகு அவ் விரு பத்தினிகளும் சிறிது காலம் அக் குழந்தையை மனவேறுபாடின்றி வளர்த்தனர். ஆயினும், ஒருநாள் அப் பிள்ளை விஷயமாக இருவருக்கும் சச்சரவு உண்டாயிற்று இளையவளான காமாக்ஷி, 'அது எனதே' எனக் கூறி குழந்தையை எடுத்துக் கொண்டு வெளியில் புறப்பட்டாள். அதனைப் பெற்ற மீனாக்ஷி "நானே அதன் தாய்; அதைத் தொடாதே." எனக் கூவினள். கடைசியில்இருவரும் சண்டையிட்டு நியாய சபை அடைந்தனர். அவர்களுடைய விவாதத்தைக் கேட்ட நியாயாதிபன், (சாக்ஷி யில்லாமையால்) யுக்தியால் உண்மையறிய விரும்பி சேவகனை "விளித்து போதிய சாக்ஷி இருவர்க்கு மின்மையால் இப்பாலனை இரண்டாகத் துணித்து இருவருக்கும் கொடுப்பதே சரி. கொலையாளியை யழைத்து வா" என்றான். அது கேட்டுக் காமாக்ஷி, "அதுதான்சரி" என்றாள். ஆனால் மீனாக்ஷி, மெய் பதறி ஐய! உமக்குப் புண்ணிய முண்டு அப்படிச் செய்யாதேயும். குழந்தை அவளுடையதாகவே இருக்கட்டும். அதைக் கொல்லாதேயும்" என வணக்கமாக மன்றாடினாள். அது கேட்டுப் புத்திமானான நியாயாதிபதி இவளே பிள்ளையின் தாய் எனத் தீர்மானித்துக் குழந்தையை அவளிடம் கொடுப்பித்து இளையவளை சிறையிலிட்டான்.

"வந்தி பரிவாய் மகவைப் பெருந்துயரம்
நொந்தறிகு வாளோ நுவல்!" —நீதிவெண்பா.

கதை—15

அதி உன்னத பதவி யடைந்த போதிலும் பூஜிக்கத் தகுந்தவர்களை அவமதிக்க லாகாது.

சந்திர வம்சத்திலுதித்த நகுஷனென்ற அரசன் ஒருவன் இருந்தான். எல்லா ஜனங்களையும் தன்னைப் போலவே பாவித்து வந்த அவன், நூறு அசுவமேத யாகங்கள் செய்தவன். வெகு காலம் சகல போகங்களுடன் ஜீவித்து முடிவில் அவன் வானுலகடைந்தான். அவன் செய்த நூறு அசுவமேதத்தின் பலனாக தேவராஜ்யம் அவனுக்குக் கிடைத்தது. நல்லோர்களான சப்தரிஷிகளால் சுமக்கப்பட்ட சிவிகை ஏறி அப் பதவிபெறச் சென்றான். செல்லும போது காம நோயால் வருந்திய அவன், புலோமிசையிடம் விரைவிற் செல்லக் கருதி, அகஸ்தியரையும்,பிற ரிஷிகளையும் நோக்கி 'சர்ப்ப,சர்ப்ப!' என்றான். "சர்ப்ப! சர்ப்ப!" என்பதற்கு 'விரைவிற் செல்க; விரைவிற்செல்க!' என்பது பொருள். இம்மொழி கேட்ட குறுமுனிவர், அவனது செல்வ மதத்தையும் அவமதிப்பையும் பொறாதவராய் "'சர்ப்ப, சர்ப்ப!' என்ற நீ சர்ப்பமே யாகுக" எனச சபித்தனர். சபிக்கவே அறிவில்லா நகுஷன் அரவமாகிச் சிவிகையினின்றும் தலைகீழாய் வீழ்ந்தான்.

"குணமென்னுங் குன்றேறி நின்றார் வெகுளி
கணமேனும் காத்த லரிது" —திருக்குறள்.

வி. கு. நடராஜன்.

வெகுளி அடக்கும் விதம்.

துன்றுசினம் உன்னிடத்திற் றோன்றும் பொழுதெல்லாம்
ஒன்றுமுதல் மூன்றுவரை உன். (1)

உன்கோபம் பின்னும் ஒழியா திருப்பின்முன்
சொன்னபடி பத்துவரை சொல். (2)

சொல்லியும் அக்கோபம் தோன்றித் துயர்செய்யின்
நல்ல(து),ஓர் நூறு நவில் (3)

நவிலப் படியே நீநாளும் நடத்தி யெனில்,
இவர் சின(ம்)நிற் கில்லை இனி. (4)

இனியவழி ஈதே இதன்உண்மை யாவும்
உனதுளமே சொல்லும் உனக்கு. (5)

A. R. ஸ்ரீநிவாஸ முதலியார்.
ஆனைமலை.

வருடாந்த அறிவிப்பு.

எல்லாம் வல்ல இறைவன தருளாலும், பத்திரிகாபிமானமும் தமிழபிமானமும மிக்கவரும, என்னிடத்துப் பேரன்பு வாய்ந்தவருமான நமது சந்தாதார்களாகிய சகோதர சகோதரிகள் அளித்து வரும் ஊக்கத்தினாலும், தாம தாம வருந்திக் கற்று ஆராய்ந்தறிந்த அரிய விஷயங்களை உலகறிந்து மகிழுமாறு விஷய தானம் செய்து வரும் அன்பர்களின் பேருதவியினாலும், நமது "விவேகோதயம்" என்னும் மகளிற்கு இம்மதியுடன் ஒரு வயது குறைவற முறைபெற நிறை வெய்துகின்றது.

இப்பத்திரிகை, ஆரம்பிக்கப்பட்ட தினம் முதல், ஒரு மாதமாவது (எக்காரணத்தைவிட்டேனும்) காலந் தாழ்க்காது வெளிவந்து கொண்டிருப்பதை மெச்சி எனக்கு அன்பார்ந்த கடிதம் அனுப்பிய அனைவர்க்கும் அகமகிழ்ந்து நன்றி கூறுகிறேன்.

மறுவருஷம் ஆரம்பிக்குமுன் தமது சந்தா தொகைகளை அனுப்பியும் பத்திரிகையைப் பற்றிநல்லபிப்பிராயம் தந்தும் எனக்கு ஊக்கம் பிறப்பித்த கனவான்களது மெய்யன்பை ஒருபோதும் மறவேன்.

போதிய காகிதம் கிடையாமையால் காகிதங்களின் விலை முன்னிலும் மூன்றத்தனையாகவும், அதற்கும அதிகமாகவும் ஏறிக்கொண்டே போவதால், பத்திரிகைகளின் சந்தாத் தொகைகளும் அதிகரித்து வருவது யாவரும் அறிந்ததே. ரூபாய்க்கு அரைப்படி அரிசி விற்றாலும், சாப்பிடாமல் பட்டினியிருக்க யாரால இயலும்? தமிழபிமானமாகிய மெய்ப் பசியுந்தாகமும வாசிப்போர்க்கும், "பொருள்வருவாய் கருதாது பொது நலத்திற் குழைத்தல்" என்ற கடைப்பிடி பத்திரிகை நடத்துவோர்க்கும் இருக்கும வரை, பத்திரிகைக்கும் அதனைப் படிப்போர்க்கும் ஒரு குறைவும் வாராது. இங்ஙனம் நான் எழுதுவதால், இப்பொழுதுள்ள 2-ரூபாய்; 1—8—0 ரூபாய் சந்தாக்களை இன்னும அதிகமாக உயர்த்துவதற்காக நான் கூற வந்த பீடிகை என்று எவரும் தவறாக எண்ணற்க. நான் சொல்ல வந்தது யாதெனில், அன்பார்ந்த விவேகோதய அபிமானிகளே! உங்களுடைய மெய்யபிமானமும் என்னுடைய தன்னலம் கருதாத் தன்மையும் உள்ளவரை, நம் பத்திரிகை நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக ஓங்கி ஒளிரும் என்பதே நிறக.

போதிய பொருள்வாய் இல்லாதிருந்தும், தமிழபிமானமும் என்னிடத்தன்புமே வாய்ந்த சந்தாதார்களிற் சிலர், விவேகோதயத்தை முன்போலவே வருடசந்தா ரூ 1—8—0 க்கும், (மாணவர்க்கும

பெண்பாலார்க்கும்)ரூ 1-க்கும் தரவேண்டுமென்றும், ஆனால் தபாற் கூலிக்காக முற்கூறிய சந்தாத் தொகைகளுடன் 4அணா வாங்கிக் கொள்ளுமாறும், இங்ஙனம் செய்தால், இப்பத்திரிகையின் அபி விருத்தி விஷயமாகத் தாம் இயன்றவாறு உழைப்பதாகவும் எழுதி இருக்கின்றனர். இன்னோரது பேரன்பிற்கு வந்தனம். இவர்களுடைய மனப்பூர்வமான வேண்டுகோட்கிணங்காதிருக்க எனக்கு மனம் வரவில்லை. ஆதலின் உண்மையில் 2-ரூபாய் அல்லது 1-8-0 ரூபாய்ச் சந்தாச் செலுத்தச் சக்தியற்ற அபிமானிகள், எனக்கு ரூ 1—12—0 ம், ரூ 1—4—0 ம மணியார்டர் செய்தால் போதுமானது என்று முழுமனதுடனும் அறிவிக்கின்றேன். அபிமானிகளின் ஆதரவு எனக்குப் பெரிதேயன்றி ஊதியம் ஒரு பிரமாதமில்லை. உள்ளபடியே, எனது சந்தாதாரர்கள் யாவரும் சிறிது சிரமப்பட்டுத் தலைக்கு ஒரு சந்தாதாரரைச் சேர்த்து அனுப்புவராயின், இன்னும் குறைந்த சந்தாவில் நமது பத்திரிகையை நடத்த முழுமனத்துடனும் முற்படுவேன். இது நிற்க.

28 பக்கங்களுடன் நான் ஆரம்பிப்பதாக முன் வாக்களித்த இப்பத்திரிகையை அதன் மூன்றுவது சஞ்சிகை முதல்,கூட 4பக்கங்கள் சேர்த்து,(எவர்க்கும்,அறிவிக்காமலே,)வெளியிட்டு வருவதைச் சிலரே அறிந்திருப்பர். சந்தாதார் தொகை நான் விரும்பி எதிர் பார்க்கிறபடி அன்பர்களின் உதவியால் அதிகரித்து விடுமாயின், சந்தாத் தொகையைக் குறைப்பதோடு நில்லாமல், இன்னும் குறைந்த சந்தாவில் முன்னினும் அதிகப் பக்கங்களுடன் இப் பத்திரிகையை வெளிப்படுத்த எனக்கு ஊக்கமுண்டாகும் என்று உறுதி கூறுகிறேன்.

இப் பத்திரிகை சம்பந்தமாக, ஸ்ரீமதி வி. பாலம்மாளும், ஸ்ரீ இ. மா. கோபாலகிருஷ்ணக் கோனாரும் புரிந்த சமயோசித உதவி இவ்வளவு வல்லவில்லை. சந்தாதார்களைச் சேர்த்தனுப்பி எனக்குப் பெரிதும் ஊக்கம் பிறப்பித்தோர்:—(1) ஆத்தங்குடி விவேகவிளக்க வித்யாசாலைத் தலைவர் ஸ்ரீ தி. ராம. சுப்பராமையரும் அவர்களுடைய மாணாக்கர்களனைவரும் (2) தேவகோட்டை ஸ்ரீ: T.A.S.A. இராமநாதன் செட்டியார், பழ. சேவுகன் செட்டியார் முதலிய வைசிய சிவானந்த சபையினர் (3) காரைக்குடி ஸ்ரீ: T. S. முருகேசன் (4) ஆனைமலை ஸ்ரீ: A. R. ஸ்ரீநிவாசமுதலியார் (5) சாத்தூர் ஸ்ரீ P. R. விசுவநாதையர் (6) திருப்பாதிரிப்புலியூர் பண்டிதை ஸ்ரீமதி அகிலாம்பிகையம்மை (7) சொக்கலிங்கம்புதூர் மாணிக்கவாசக வித்யாசாலைத்தலைவர் ஸ்ரீ: ரெ. ராமமூர்த்தி ஐயர் (8) ஸ்ரீமதி வி. பாலம்மாள் முதலியோர். இவர்களுக்குப் போதிய நன்றி கூற எனக்கு வல்லமை இன்று.

என்னிடத்தன்பு மன்னிய பெரியீர்! யான் எனைப் பற்றியே இரண்டொரு மொழி கூற விரும்புகிறேன்:

"'ஆவிற்கு நீர்'என் றிரப்பினும், நாவிற்(கு)
இரவின் இளிவந்த தில்"

என்பதைப் பெரும்பாலும் கடைப்பிடித் தொழுகுபவன் யான் என்பது என்னை யறிந்த யாவரும் அறிவர்.

"இருக்கு மிடந்தேடி என்பசிக்கே அன்னம்
உருக்கமுடன் கொண்டுவந்தால் உண்பேன்."

என்று பட்டினத்தடிகள் தமது சுவாநுபவத்தின் மேற் கூறியதை நினைந்து ஏன்யோசகியதை அறியாத எவரிடமும் இப்பத்திரிகை சம்பந்தமாக நேரிற் சென்று "பல்லெலாம் தெரியக்காட்டிப் பருவரல் முகத்திற் கூட்டி" யான் யாசித்ததில்லை. ஆயினும் பெரும் பட்டமும், பதவியும் பணமும் வாய்ந்தவர்களும், தமிழபிமானிகள் என்று கருதப் படுவோரும் என்னை நன்கறிந்தோருமான இரண்டொரு ஜமீந்தார் நண்பர்களுக்கு "இதுகாறும் எவ்வித உதவியும் அவர்களிடம் யான் பெற்றவனில்லை" என்றும், இப்பத்திரிகை சம்பந்தமாக ஏதேனும் செய்து அவர்கள் எனை ஊக்க வேண்டுமென்றும், கடிதம் எழுதியுளேன். அவர்களுடைய அன்பார்ந்த பதிலையும் உதவியையும் ஆவலுடன் விரும்பி எதிர்பார்த்தவண்ணமாக இருக்கிறேன். இங்ஙனம் இதனைப் பற்றி உங்கட்கு அறிவிக்கும் இச்சமயத்தில், எனது ஆருயிரனைய சீரிய நண்பரும், வடமொழி தென்மொழி வல்லுநரும், என் சங்காபிமானியும், செட்டி நாடுகள் பலவற்றிலும் தமிழ்ப்பயிர் நட்ட தகைமையாளருமான ஸ்ரீ மு. கதிரேசச் செட்டியாரவர்கள், மேலச் சிவபுரி சன்மார்க்க சபைத்தலைவர் ஸ்ரீ அண்ணாமலை செட்டியாரிடம், எனது பத்திரிகைக்குத் தக்க பொருளுதவி புரிவது அவசியமென மெய்யன்போடு வற்புறுத்திக் கூறிய விஷயம் எட்டுகின்றது. எனது முயற்சி அற்பமுமின்றி இப்பத்திரிகை விஷயமாக என் பொருட்டு இவ்வளவு சிரமம் எடுத்துக் கொண்ட அவர்களுடைய அபிமானத்தை என்னென்று சொல்வேன்! இப்பத்திரிகையின் அபிவிருத்தி கருதி நன்கொடை அளித்து ஆதரிக்கும் உதாரகுண சீலர் யாவரேயாயினும் அவரது உதவியை ஒருபோதும் மறவேன். நிற்க.

உப-பத்திராதிபர் ஸ்ரீமதி வி. பாலம்மாள் இயற்றிய "சாணக்ய சாகஸம் என்னும் சந்திரகுப்த சரித்திர"த்தின் இரண்டாம் பாகம், விவேகோதயத்தில் விரிவாக வெளிவருமாதலின், கதைத்தொடர்ச்சியை நமது நேயர்கள் நன்கு அறியுமாறு முதற்பாகத்தில் அடங்கிய கதைச் சுருக்கத்தை வெளியிட்டு வருகிறேன் அல்லவா? இச்சுருக்கம் வருகிற சஞ்சிகையில் முடிவுபெறும். மார்ச்சுமீ சஞ்சிகை

யில், முதல் பாகத்தினும் இனிமையில் ஒரு சிறிதும் குறையாத இரண்டாம் பாகம் விரிவாக ஆரம்பிக்கும் என்ற விஷயத்தை, அதி ஆவலுடன் அதனை வாசிக்க இருக்கும் அன்பர் அனைவர்க்கும் ஆநந்தத்துடன் அறிவிக்கின்றேன். ஸ்ரீ: K. வேங்கடராமையர் எழுதி வரும் "கமலாவதி" என்னும் நாடகம் இன்னும் நான்கு சஞ்சிகைகளில் முடிந்து விடும் என்று எண்ணுகிறேன்.

சென்ற வருஷம் சந்தா அனுப்பியோரும் இனிச் சந்தாதாரகளாவோரும், இப்பத்திரிகை பெற்றதும், தமது சந்தாத் தொகையை எனக்கு அனுப்பி உதவி செய்யுமாறு வேண்டுகிறேன். நல்ல வேளையாய், பல மாதம் பத்திரிகை பெற்று, வி. பி கிடைத்தவுடன் "தேவை யில்லை" என்று திருப்பி விட்டு வீண்நஷ்டத்துக்குள்ளாக்கும் அயோக்யா எவரும் இதுகாறும் சந்தாதாராகாதது எனது பாக்கியமே. அறியாத எவர்க்கும் நான் பின்னால் பணம் பெறலாகும் என்று முன்னடிப் பத்திரிகை அனுப்பாமையே இந்நஷ்டத்திற்குள்ளாகாமைக்குக் காரணம். ஆயினும் விதியற்ற வீணர் சிலர் வீண் பெருமைக்குப் பத்திரிகை அனுப்புமாறு வேண்டி வேண்டி எழுதி விட்டு, அனுப்பிய வி. பி.யைத் திருப்பியதுமட்டும் விசனிக்கத் தக்கதே. இக்கொடியவர்கள் சிலர் எமக்குக் கொஞ்ச நஷ்டம் உண்டாக்கினதன் பலனாக வேறு விஷயங்களில் அதிக நஷ்டம் அடைந்தமைக்கு அவர்கள் பால் அநுதாபமே காட்டுகிறேன்.

பத்திரிகை பெற விருப்பில்லாதவர், முன்னரே தமது விருப்பைத் தெரிவித்து விடுமாறு வேண்டுகிறேன். மெய்யபிமானிகளாக வுள்ளோர்க்கு இச் சஞ்சிகையுடன் முன்பு நான் அச்சிட்ட கார்டு ஒன்று அனுப்பியுளேன். அதனைத் தயை செய்து அவர்கள் பூர்த்தி செய்து அனுப்புக. —பத்திராதிபர்.

கவனியுங்கள்! முக்கிய அறிவிப்பு. கவனியுங்கள்!

முதல் நூறு சந்தாதாரர்க்கு ஒரு சாதகம் உண்டு. ஸ்ரீமதி வி. பாலம்மாள் இயற்றிய சாணக்ய சாஹஸம் அல்லது சந்திரகுப்த சரித்திரம் என்ற அதி அற்புத சரித்திர நாவல் (முதற்பதிப்பு) முதற்பாகம் முழுதும் பாதிவிலைக்கு, அதாவது எட்டே அணாவிற்குத் தருவேன். 100-பிரதிகளே இவ்வாறு கொடுபடும். இந்நாவல், இனி விவேகோதயத்தில் வெளிவரும் இரண்டாம் பாகம் முழுக்கதையையும் ஆதியோடந்தமாகப் படித்து ஆநந்திக்க ஏதுவானதாகும். சாணக்யசாஹஸம் வேண்டாதவர்க்கு 150 பக்கங்களடங்கிய 'தமிழ்வியாஸங்கள்' 12-அணாவிலை கொண்டது, 6-அணாவுக்குக் கொடுபடும். இங்ஙனம் கொடுபடுவதும் நூறு பிரதிகளே. ஆதலால் விவேகோதய அபிமானிகள் காலதாமதமின்றி சந்தாதாரராகச் சேர்ந்து எனக்கு அறிவிக்குமாறு வேண்டுகின்றேன். —ம. கோபாலகிருஷ்ணையர்.

உ

சமாசாரக் கொத்து.

நச்சினார்க்கினியர் ஞாபகச் சின்ன மஹோத்ஸவம்:—இது, டிசம்பர் மீ 8, 9, 10வ களில் வெகு விமரிசையுடன் நிறைவேறியது. 8வ யன்று மாலை வி. எ. ஹாலில் கூடிய கூட்டத்தில் பிரபல நியாய வாதியான ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தி துரைராஜா B. A. B. L. அக்ராஸநம் வகித்து முகவுரை கூறியதும், "பகவான் கிருஷ்ணனைப் பற்றிய கட்டுரை" என்னும் சம்பாஷணை இரண்டு மாணவர்களால் சம்பாஷிக்கப் பட்டது. ஸ்ரீ ம. கோபாலகிருஷ்ணையர் "நச்சினார்க்கினியரின் வரலாறு"ம், அவரது ஞாபகச்சின்னம் தாம் ஸ்தாபித்ததற்குக் காரணமும் கூறினர். அதன் பின்பு "பாவலர் அமைச்சர் படைவலர் என்னும் மூவரிற் சிறந்தோர் யாவர்" என்பதைப் பற்றி மூன்று சிறுவர்களால் ஓர் சம்பாஷணை நடந்ததும், "வண்டமிழ் மொழியை வளர்த்திடுமாறு" என்னும் விஷயம் ஸ்ரீ ஆர். எஸ். நாராயணசாமி ஐயர் B. A. B. L. ஆல் நன்கு உபந்யஸிக்கப் பெற்றது. பின்பு பரீக்ஷையிற் றேறிய மாணவர்கட்குப் பரிசும், யோக்யதா பத்திரங்களும் அக்கிராசனாதிபதி மூலம் அளிக்கப்பெற்றன. கடைசியாக "காதலர் கண்கள்" என்னும் நாடகத்திலிருந்து ஓர் களம் அகஸ்ய ரஸம் ததும்ப சங்க அங்கத்தினரால் நடிக்கப் பெற்றது. அக்கிராசனாதிபதி அவர்கள் முடிவுரை கூறியதும், அவர்க்கும் பிறர்க்கும் பூமாலையும் பாமாலையும் சூட்டப்பெற்றன. அநந்தரம் சங்கத்தாரின் மங்கள வாழ்த்தோடும் 5 மணிக்குக் கூடிய சபை சுமார் 8—30 மணிக்கு நிறை வேறியது.

9-வ காலை 9-மணிக்கு ஸ்ரீ ம. கோபாலகிருஷ்ணையரவர்களின் அக்கிராசனத்தின் கீழ் வி. எ. ஹாலில் கூடிய மகா சபையில் "அழகிய நல்லூர் செந்தமிழ்கலாசபை" அக்ராஸநாதிபதி ஸ்ரீ தி. அ. வேங்கடசாமி ரெட்டியாரவர்கள் "தாய்மொழியாகிய தமிழ் மொழி"யைப்பற்றிப் பிரசங்கித்தனர் மாலை 3-மணிக்குப் "புத்தகப்பெருமை"யைப் பற்றிய கட்டுரை "ஞானயோகம்", "புதல்வர் கடமை", "அன்பு", "வியாபாரமும் விவசாயமும்", என்னும் விஷயங்களை முறையே ஸ்ரீமான்களாகிய ரா. சுந்தரராஜன், கே. எஸ். சுந்தரசாமி ஐயர், ம. கோபால கிருஷ்ணையர், வானமாமலை டி. ஆர். கிருஷ்ணசாமி ஐயங்கார், நா கனகராஜையர் இவர்கள் நன்கு பேசி முடித்தனர். கடைசியில் ஸ்ரீ கனகராஜையரது நாடகத்தைப் பற்றிய பிரசங்கம் முடிந்ததும், அக்கிராசனாதிபதியாகிய ஐயரவர்கள், யாவினுக்கும் முடிவுரை கூறினர் பிறகு யயாதி என்னும் நாடகம் நடிக்கப் பெற்றது. பின்பு யாவருக்கும் ஹாரம் சந்தனம், தாம்பூலாதிகள் கொடுத்து ஸ்ரீ அழகர் ரெட்டியாரது அபிமானம் தோன்ற வழங்கப் பெற்று மங்கள வாழ்த்துடன் சபை சுமார் 9 மணிக்குக் கலைந்தது.

மூன்றாம் நாள் (ஞாயிற்றுக் கிழமை) காலை 7—30 மணிக்கு அன்னக்குழிமண்டபத்தில் ஸ்ரீ ம. கோபாலகிருஷ்ணையரவர்களின் அக்ராசனத்தின் கீழ், "சிவகாமி சரிதை" கர்மயோகம், "இந்துதேச சரித்திற்கு வேண்டிய ஆதாரங்கள்" என்னும் விஷயங்கள் முறையே சாத்தூர் ஸ்ரீ பி. ஆர். விசுவநாதன், ஸ்ரீ கே. எஸ். சுந்தரசாமி ஐயர், ஸ்ரீ ப.ரா ஐயாசாமி ஐயர் B A இவர்களால் விரிவாகவும் தெளிவாகவும் நன்கு பேசப் பட்டன. அக்ராசனாதிபதி அவர்கள் முடிவுரை கூறியதும், காரியதரிசியின் வந்தனோபசாரத்தோடும் மங்கல வாழ்த்தோடும் சபை சுமார் 11-மணிக்குக் கலைந்தது.

தாதம் பேட்டைப் பழூர் சன்மார்க்க சபை—இதன் 3-வது வருட பூர்த்தி மகோத்ஸவம் சென்ற டிசம்பர்மீ 28-29-ஆம் தேதிகளில் மஹா மஹோபாத்தியாய பிரமஸ்ரீ வே.சாமிநாதையரவர்களின் அக்கிராசனத்தின் கீழ் இனிது நிறைவேறியது. சபாநாயகர்க்கு வரவேற்பு உபசாரப்பத்திரமும், சபையின் 3-வது ஆண்டு அறிக்கைப் பத்திரமும் காரியதரிசியால் படிக்கப்பட்டதும், சபாநாயகர் முன்னுரையாக இத்தாலூகாவின் பழையகால நற்குறிகளைத் தெளிவாகக் கூறினர். பிறகு மதுரை பிரமஸ்ரீ. ம கோபாலகிருஷ்ணையரவர்கள், "தமிழ் மொழியின் வரலாறும் அதனை வளர்த்திடும் விதமும்" என்பதைத் தம பிரசங்க விஷயமாகக் கொண்டு, தமிழ் மொழியானது நம் முன்னோர்களாலே நன்கு மதிக்கப்பட்டு வந்திருந்தும் அதை இப்பொழுதுள்ளார் தற்கால நாகரீகத்தினால் புறக்கணித்து விடுகிறார்களென்றும், அதனாலே ஏற்பட்டதும் இனி ஏற்படப் போகிறதுமான குறைகள் இன்னின்ன என்றும் கூறி, மற்றவைகளையும் வெகு அழகாகச் சொல்லி முடித்தார். பிறகு குழித்தலை பிரமஸ்ரீ அரங்கசாமி ஐயர், "ஸ்ரீ பஞ்சாட்சரம்" என்னும் விஷயமாய்த் தாம் எழுதிய வியாசத்தை விளக்கமாகப் படித்தனர். அநந்தரம் சபாநாயகர் அபிப்பிராயம் கூற, அன்றைய நடவடிக்கைகள் நிறைவேறின. மறுநாள் திருக்கோவிலூர் ஸ்ரீமான் ம ரா. குமாரசுவாமி பிள்ளையால் "நமது கடன்" என்னும் விஷயமும், சோழவல்லி ஸ்ரீமான் பாலசுந்திரநாயனாரால் "இணக்க வியலு மதன் பயனும்" என்னும விஷயமும், ஸ்ரீமான் ஆ. சத்திவேற் பிள்ளையால் "மணிமந்திர ஔடதம்" என்னும் விஷயமும, சென்னை P. S. ஹைஸ்கூல் தமிழ்ப் பண்டிதர் பிரமஸ்ரீ அனந்தராமையரால் "குரு பக்தி" என்னும் விஷயமும், மதுரை பிரமஸ்ரீ சுந்தரேச ஐயரால் "கம்பராமாயணம் குகப்படல"மும் பிரசங்கிக்கப் பெற்றன. திருவையாறு சமஸ்கிருத காலேஜ் தமிழ்ப் பண்டிதர் பிரமஸ்ரீ சந்தானமையங்கார் இடையிடையே தேவாரப் பண்முறைகள் இசையுடன் ஓதினர். நிகழ்ந்த எல்லா விஷய சம்பந்தமாகவும் சபாநாயகரால் அபிப்பிராயங் கூறப் பெற்றதும், சபையோர், அனைவர்க்கும்

வந்தனோபசாரம் கூறி மாலைகள் சூட்டினர். கடைசியாக நமது காருண்ய சக்கரவர்த்திக்கு இப்பொழுது நடக்கும் யுத்தத்தில் ஜயம் கிடைக்க வேண்டுமென்ற ஈசுவரப் பிரார்த்தனையுடன் சபை இனிது நிறைவேறியது. சுபம்.—போ. மாணிக்கம், காரியதரிசி.

குட்டி லோட்டி என்ற அழகிய நல்லூர்ச் செந்தமிழ்க் கலா சபை:—இதன் இவ்வருஷத்திய 23-வது கூட்டம் திண்டுக்கல் தாலூகா போர்ட் வைஸ் பிரஸிடெண்டும், அங்குள்ள 'தமிழ் வித்யா சங்க' ஸ்தாபகரும், நியாயவாதியுமான ஸ்ரீ: வி. பொன்னுசாமி நாயுடு காருவின் அக்ராஸநத்தின் கீழ் நடைபெற்றது. சங்க வாழ்த்தும் அரசவாழ்த்துமானதும், ஸ்ரீ தி. அ. வேங்கடசாமி ரெட்டியாரவர்கள் அக்ராஸநர்க்கு நல்வரவு கூறினர். அக்ராசனர் சங்கப் பெருமையையும் இவ்வூரக்கும், இச் சங்கத்திற்கும் தமக்கும் உள்ள சம்பந்தத்தையும் விரிவுறக் கூறினர். பிறகு காரியதரிசி வாராந்த அறிக்கை வாசித்ததும, ஸ்ரீ தி. அ. வேங்கடசாமி ரெட்டியார் "பெண்கல்வி"யைப் பற்றிப் பிரசங்கித்தனர். இவ்விஷயத்தைப் பற்றி சிறிது தலைவரும் காரியதரிசியும் தங்கள் நல்லபிப்பிராயத்தைக் கூறியதும், இச்சங்கப் போஷகராகிய அறுப்புக்கோட்டை பிற்கா ரி. இ. ஸ்ரீ: R. ஸ்வாமி சுப்பையா நாயுடுகாரு இச் சங்க முன்னேற்றத்திற் காவன கூறின பின்னர், அக்ராஸநர் எழுந்து பெண்மக்கட்குக் கல்வி மிக அவசியம் என்பதற்குப் பல ஆதாரம் காட்டி முடிவுரை கூறினர். "வாய்மை" என்ற விஷயத்தை வரும் கூட்டத்தில் உபந்யசிப்பதாய் ஸ்ரீ ஜான் ஸாமவேல் ஒப்புக் கொண்டனர். பிறகு, ஸ்ரீ: ஸ்வாமி சுப்பய்யா நாயுடுவால் அக்ராஸநர்க்கும், சபையோரால் பிறர்க்கும் பூமாலை புனையப் பெற்றன. பிறகு அக்ராஸநர்க்குப் புனைந்த பூமாலையுடன் சங்கம் இனிது நிறைவேறியது. சபைக்கு வந்தோர் யாவர்க்கும் ஸர்வே ஸ்பெஷல் இன்ஸ்பெக்டர் மூள்ளிப் பாளையம் ஸ்ரீ விசுவநாதையர் சிலாபோஜனம் செய்வித்து மகிழ்வித்தனர்.

இச் சங்கத்தின் நான்காம் வருஷோத்ஸவம் ஹரித்வாரமங்கலம் ஸ்ரீ: வா. கோபாலசாமி ரகுநாத ராஜாளியாரது அக்கிராசனத்தின் கீழ் பிப்ரவரி 10உ 11உகளில் நடைபெறும்.

மதுரை மாணவர் செந்தமிழ்ச் சங்கம்:—ஸ்ரீ மீனாக்ஷி சுந்தரேசுவரர் கோயிலில் தெற்காடி வீதியில் நடைபெற்று வரும் ஸ்ரீபாண்டித்துரைத் தேவர் பஜனைமடக் கட்டிடம் பாலவனத்தம் ஜமீந்தாரவர்களால் ஸ்ரீம. கோபாலகிருஷ்ணையர் வசம், சோமவாரம் தோறும் பஜனை நடத்தி வருமாறும், தமது சங்கசம்பந்தமான சகல காரியங்களையும் நடத்திக் கொள்ளும் படிக்கும் ஒப்புவிக்கப் பட்டுள்ள சுபசெய்தியைப் பெருமகிழ்ச்சியுடன் அறிவிக்கின்றோம்.

இப்புதிய கட்டிடத்தில் இச்சங்கத்தின் இவ்வருஷத்திய 25-வது பிரசங்கம், ஆரம்பப் பிரசங்கமாக ஜனவரி௴ 26௳ யன்று மாலை 6-மணிக்கு நடைபெற்றது. அச்சமயம் ஸ்ரீ ம. கோபால கிருஷ்ணையரவர்கள் "தமிழ்ச் சங்கங்கள்" என்பதைப் பற்றிப் பிரசங்கித்தனர். சபையின் அபிவிருத்தியைக் கோரி "விவேகோதயத்தின் உப-பத்திராதிபராகிய ஸ்ரீமதி வி பாலம்மாளும், ஸெயிண்ட் மேரி கலாசாலைத் தமிழ் உபாத்தியாயர் ஸ்ரீ மு. கோவிந்தசாமி ஐயரும், திருநெல்வேலி "நெல்லை மாணவர் தமிழ்ச்சங்க" உபாக்கிராசனாதிபதியாகிய ஸ்ரீ சி. எஸ். ராமலிங்கம் பிள்ளையும், கம்பராமாயணப் பிரசங்கியாராகிய ஸ்ரீ வானமாமலை கிருஷ்ணையங்காரும், பிறரும் பேசினர். இக் கட்டிடத்தில் 27௳ மாலை 6-மணிக்குப் பெரியகுளம் ஆர். சக்கரராஜையரவர்களால் "பக்தி" என்ற விஷயம் உபந்யஸிக்கப் பட்டது. நிற்க. இக்கட்டிடத்தில் இனி, இச்சங்கப் பத்திரிகா சபையும் சோம வார பஜனையும் நடை பெறும்.

கோக்லே பரிசு:—தேசாபிமானமும் தமிழபிமானமும் மிக்க சேதுபதி உயர்தரகலாசாலை உபாத்தியாயர் ஸ்ரீ எம். வி. ரங்கசாமிஐயர், உத்தம தேசாபிமானியான கோக்லேயின் ஞாபகார்த்தமாக வருடந்தோறும் 3-8-0 ரூபாய் பெரும்படியான பரிசு ஸ்ரீ ம. கோபாலகிருஷ்ணையர் மூலமாக அளிக்க ஏற்பாடு செய்துளார். "அப்போதைக் கப்போது குறிக்கப்படும் ஓர் உத்தம தேசாபிமானியின் ஜீவிய சரித்திரத்தைத் தமிழில் ஏனையோரினும் நன்கு எழுதும் மதுரை மாணவன் ஒருவனுக்கு, மதுரைமாணவர் செந்தமிழ்ச் சங்கம் இப்பரிசு தரவேண்டு" மென்ற ஸ்ரீமத் ஐயரவர்களின் விருப்பிற்கிணங்க, இம்மாதம் 6௳ "கோக்லே"யின் சரித்திரமே விஷயமாகக் குறிக்கப் பட்டது. நடந்த பரீக்ஷையில் மதுரைக் காலேஜ் மாணவன் ஸ்ரீ: ஆர். மகாதேவன் இப்பரிசு பெற அருகனாயினன்.

தேவகோட்டை வைசிய மித்திரன் பெண்பாடசாலை:—இதன் வருஷோத்ஸவம் வித்யாபிமானியும் பொது நலப்பிரியருமான ஸ்ரீ: ராம. ரெ. சித. வைரவன் செட்டியாரது புதுமாளிகையில், டிப்டி கலெக்டர் ராய் பகதூர் ஸ்ரீ T. N. சிவஞானம் பிள்ளையவர்களின் அக்ராஸனாதிபத்யத்துடன் இனிது நிறைவேறியது. மாணவர்கள் கடவுள் வாழ்த்துக் கூறியதும், கோணூறுக் கோல் போல் நடுநிலை தவறாக் கொள்கையரும், வைசிய மித்திரன் பத்திராதிபரும், இவ்வித்யா சங்கக் காரியதரிசியுமான ஸ்ரீ சித. ராமநாதன் செட்டியார், வைசிய சிவானந்த சபைக்கும், இப்பெண்பாடசாலையை நடத்தும் "தர்மவித்யா ஞானோதய சங்கத்திற்கும், உள்ள சம்பந்தத்தைக் கூறி, அக்ராஸனரது பெருந்தன்மையை வியந்து, கலாசாலை மானேஜரை "தர்ம வித்ய ஞானோதய சங்கத்தையும் அது நடத்தும் பெண்பாடசாலையையும் பற்றிய அறிக்கைப் பத்திரம்" வாசிக்கக் கேட்டுக்கொண்டனர். இதன் பிறகு "பெண்கல்வி அபிவிருத்தி"யைப்பற்றி ஸ்ரீமதி வி. பாலம்மாளும், "ராஜவிசுவாச"த்தைப் பற்றி ஸ்ரீ: ம. கோபால கிருஷ்ணையரும் பிரசங்கம் செய்தனர். இவையானதும், மாணவிகள்

கும்மியடித்துக் கோலாட்டம் போட்டனர். அநந்தரம் அக்ராஸநர் மாணவிகளுக்குப் பரிசளித்து,சங்கத்தை வாழ்த்தினர். அதன்பிறகு யாவர்க்கும் சந்தனதாம்பூலாதியும் மாணவிகட்குச் சிற்றுண்டியும் ஸ்ரீ: வயிநவன் செட்டியாரால் வழங்கப் பெற்றன. பின்பு மாணவிகள் ராஜவாழ்த்துக் கூற சபை மங்கள கரகோஷத்துடன் கலைந்தது.

இளங்காட்டு நற்றமிழ்ச் சங்கம்:—தைமீ 3௳ யன்று இச்சங்கம், ஸ்ரீ ம. கோபால கிருஷ்ணையரின் அக்ராஸநத்தின் கீழ், பாலவநேசுவரர் கோவிலிற் கூடியது. இக் கூட்டத்திற்கு வேற்றூர்களினின்றும் அநேகர் விஜயம் செய்திருந்தனர். கடவுள் வாழ்த்தானதும்,திருக்காட்டுப் பள்ளி ஹைஸ்கூல் தமிழ்ப் பண்டிதர், ஸ்ரீ: Y. சுப்பிரமணிய ஐயர் "கல்வி" என்பதைப் பற்றியும், "அக்ராஸநர் வாய்மை" என்பதைப் பற்றியும் பிரசங்கித்தனர். பின்பு ஸ்ரீ வி. மு. தண்டாயுதபாணிக் காடவராயர், சபையோர்க்காக

"நற்றமிழும் நன்னெறியும் நாளும் வளர்வதற்கிந்
நற்றமிழ்ச்சங் கத்தின்று நாயகமாய்க்—கற்றவர்கள்
பற்றுறுகோ பால கிருட்டிணப்பேர்ப் பாவல! நிற்
பெற்றதுயாம் எத்தவம்என் பேம்?"

§கோபாலன் திருமகனூர் குலைந்துபொடி படப்புரிந்த குலவுதீக்கால்
*கோபாலன் அருள்வாய்ந்த நின்குருவாம்சணமுகப்பேர்க்குரிசில் சீலச்
§கோபாலன் பொருவாதே அநுதினமும் நிலவுமனக் கோதில் சீர்த்திக்
கோபாலகிருட்டிணநன ஞமி! நின தரும் பெருமை கூறற் பாற்றே?

விண்முகத்தே தேவர் விளக்கமுறச் சூர்கடிந்த
சண்முகத்தே வேஅரசஞ் சண்முகனுய்—மண்முகத்தில்
வந்துனக்கு வான்றமிழை வாழ்வு பெறஉரைத்தான்
இன்றெமக்கு நீயுரைத்தாய் இங்கு"

என்று மூன்று கவிகளைக் கூறி அக்ராஸநரை வியந்து பூமாலை புனைந்தனர். பிறகு கூறப்பட்ட மங்கல வாழ்த்துடன் சபை இனிதுநிறைவேறியது.

தேவகோட்டை வைசிய சிவானந்த ஸபையின் 4-வது ஆண்டு நிறைவுக் கொண்டாட்டம்:— இது ஜனவரிமீ 28௳ ஆரம்பமாகி 3-தினங்கள் டிப்டி கலெக்டர் ராய் பகதூர் ஸ்ரீ T. N. சிவஞானம் பிள்ளையவர்கள் அக்ராஸனத்தின் கீழ் நடைபெற்றது. இம்

§கோபாலன் திருமகன் – மகாவிஷ்ணுவின் மகன்: மன்மதன், *கோபாலன்–நெற்றிக் கண்ணன்: பரமசிவன், §கோபாலன் பொருவாதே – கோபால் அன்பு ஒருவாதே.

மகோத்ஸவத்திற்காக அதிவிசேஷமாக அமைக்கப்பட்டிருந்த பெரிய கொட்டகையில் ஸ்திரீகளுக்கென்று பிரத்தியேக இடமும் அமைக்கப்பட்டிருந்தது.

28-உ ஞாயிற்றுக்கிழமை மாலை கூடிய கூட்டத்தில்; கடவுள் வாழ்த்துக் கூறப்பட்டதும, இநநகர் "தர்ம வித்யாஞானோதயசங்க"த்தின் ஆதரவில் நடைபெறும், "வைசிய மித்திரன் பெண்பாடசாலை" மாணவிகள், ராஜவாழ்த்தும், தேவாரப் பதிகங்களும் ஓதினர். பிறகு அக்ராஸனருக்கு நல்வரவு கூறப்பெற்றது. காரியதரிசியால் வாசிக்கப்பெற்ற வருடாந்த அறிக்கையினின்றும சபையின் அபிவிருத்தி நன்கு விளங்கியது. வருஷோத்ஸவ சம்பந்தமாக அக்ராஸனர் முகவுரை சில கூறியதும "வைசிய மித்திரன் பெண்பாடசாலை" மாணவி, ஞானம்பாள், கல்வியையும், அஹிம்ஸை ஜீவகாருண்யத்தையும் பற்றி 'அவையஞ்சி மெய்விதிர்க்காது' வெகு அழகாகப் பேசினர்.

இஃதானதும், நெல்லை ஸ்ரீ சங்கரமூர்த்தி முதலியார், "மூர்த்தி உபாசனை"யைப் பற்றி நன்கு பிரசங்கித்தனர். பிறகு, மாத்ரளை விவேகானந்தசபைத் தமிழ்ப்பண்டிதர் ஸ்ரீ வ. மு. இரத்திநேசுவரையர் அனுப்பிய "நன்மை நாடல்" என்ற விஷயம் ஸ்ரீ T A S.A. இராமநாதன் செட்டியாரால் வாசிக்கப்பட்டதும், இச்சங்கத்தவரும் தர்ம வித்யா ஞானோதய சங்கத்தை நடத்தி வருபவர்களுள் ஒருவரும், ஆராய்ச்சி மிக்குடையவருமான ஸ்ரீ அரு லெ நா லெ நாராயணன் செட்டியாரால் "பிராணாயாமம்" என்ற விஷயம, பல அரிய மேற்கோள்களுடன் உபந்யஸிக்கப்பட்டது. பிறகு விவேகோதயத்தின் உப-பத்திராதிபராகிய ஸ்ரீமதி வி பாலம்மாள் "பெண் மக்கட்குரிய படிப்பு" என்பதையும், மதுரை ஸ்ரீம கோபாலகிருஷ்ணையர் "நட்பு" என்பதையும், மதுரைத் தமிழ்ச்சங்க காரியதரிசி, ஸ்ரீ T.C. ஸ்ரீநிவாசையங்கார் B. A. B. L. "கம்ப"னையும் பற்றிப் பேசி யாவரையும் மகிழ்வித்தனர்.

இரண்டாம் நாள் (29—1—17ல்) கூடிய மகாசபையில், "பொது விஷய"மாக ஸ்ரீ R மீனாக்ஷி சுந்தரமையர் சில கூறியதும "பெரியாரைத் துணைக்கோடல்" என்ற விஷயம் திருவையாறு ஸம்ஸ்கிருத கலாசாலைப் பண்டிதர் ஸ்ரீ சந்தானமையங்காரால உபந்யஸிக்கப்பட்டது. இதன்பின் பலவான்குடிக் கலாசாலைப் பண்டிதர் ஸ்ரீ குமாரவீரையர் 'மனிதவாழ்க்கை'யையும் காரைக்குடிப் பண்டிதர் ஸ்ரீ S. சிதம்பரையர் "புலவர் மனத்தூய்மை"யையும், சிலேடைப் புலி ஆ சாமிநாதையர் "பக்தி"யையும், ஸ்ரீ பள வே சு. இலட்சுமணன் செட்டியார், ஜீவகாருண்யத்தையும், கோனாபட்டுக் கற்பக விநாயக கலாசாலைப்பண்டிதர் ஸ்ரீ அ கோபாலையர் "ஒழுக்கமும் கல்வியும்" என்பதையும், பாளையங்கோட்டை "நாட்டுக் கோட்டை வைசியம்"

என்பதின் ஆசிரியர் ஸ்ரீ சோ. ஆண்டியப்ப பிள்ளை "கடவு"ளையும், ஸ்ரீ R. மீனுக்ஷி சுந்தரமையர் "நாளைக்கு ஆகட்டும் என்ற நமது வழக்கம்" என்பதையும் பற்றிப் பிரசங்கித்தனர்.

மூன்றும் நாள் (30—1—17) மாலை, போஸ்ட்மாஸ்டர் ஸ்ரீ கல்யாணசுந்தரமையர் "சிவஞான ஸ்வரூப" த்தையும், நெல்லை ஸ்ரீ பா. சிதம்பரம் பிள்ளை "இயம் நியமம்" என்பதையும், புதுவயல் ஸ்ரீ V. R சோம சுந்தரம் செட்டியார் "மேன்மக்க"ளையும், சொக்கலிங்கம் புதூர் மாணிக்க வாசக வித்யாசாலை பண்டிதர் ஸ்ரீ இராமமூர்த்தி ஐயர், "மெய்யுணர்வு" என்பதையும், கண்டனூர் ஸ்ரீ தெ. அரு சித இராமநாதன் செட்டியார், "இல்லறம்" என்பதையும் பற்றி வெகுசாதுர்யமாகப் பிரசங்கித்தனர். இப்பிரசங்கங்கள் யாவினுக்கும் அக்ராஸநர் முடிவு கூறினர். நிற்க.

இவ்வருஷோத்ஸவ சம்பந்தமாக சபையார்களும் ஊரார்களும் காட்டிய ஒற்றுமையும் ஊக்கமும் இவ்வள வவ்வளவென யாம் எடுத்துரைக்க வல்லேம் அல்லேம். இவ்வூக்கம் மேன்மேலும் பெருக எல்லாம் வல்ல இறைவன் திருவருள் புரிக.

புத்தக மதிப்புரை.

மகான் முஹம்மத் நபி அவர்களின் உபதேச ரத்நம்:—இவ்வரிய மணிகள் அராபி, பார்ஸி, உருது முதலிய இஸ்லாமிய நூல்களிலிருந்து, எர்வாடி மௌல்வி முகம்மத ஷாஹுல ஹமீது அவர்களின் சீடர் எம். ஏ. மலிக் ஸாஹிப் அவர்கள் திரட்டிய தாகும். பெறற்கரிய 'ரத்நாகரம்' எனத் தகும் இந்நூலைப் புறமதத்துவேஷ மின்றிப் படிப்போர்க்கு, அது, நீதியும் ஒழுக்கமும் நிறைந்த நியதி நூலாகும் என்பது நன்கு விளங்கும். இந்நூலுக்கிணங்க ஒழுகும் மகமதியர் மகாமதியராவர் என்பதில் ஐயம் இல்லை. ஆய்ந்து நோக்குவோர்க்குப் பெரும்பாலும் இது சர்வ சமய சமரஸநூலாகவே இருப்பது தெரியவரும். ஸ்திரீகளை மகமது மதம் அடிமைகளாக்குமென்றும், இஸ்லாமியர் பிறமதத் துவேஷிகள் என்றும், இவை போல் வேறு விதங்களாகவும் பிதற்றித் திரியும் பேதை மாந்தர்கட்கு இது மெய்யறிவுச் சுடர் கொளுத்துவதாகும். இதில் அடங்கிய 85-விஷயங்களும் வெகு அழகாக எழுதப்பட்டுள்ளன. எழுதப் படிக்கத் தெரிந்த ஒவ்வொருவரும் வாசித்துப் பயன் அடையத்தக்க வண்ணமாக வெளிவந்துள்ள இந்நூலின் விலை அணு 10 ஆகும். இதனைப் பதிப்பித்தவர்க்கு வடமொழிப் பயிற்சியும் மிக்குள தென்பது கவனிக்கத்தக்கது இதில் காணப்படும் அற்ப சொற்ப இலக்கண வழுக்களும், எழுத்துப் பிழைகளும், கூட மறுபதிப்பில் காணப்படா என்று உறுதியாக நம்புகிறோம். இந்நூலை வெளிப்படுத்திய சென்னையிலும், ரங்கூனிலும் உள்ள 'நவீன கதா புத்தக சாலை'யார்க்குத் தமிழர்களும் மெய்யறிவுணர்ச்சியில் விருப்புள்ளவர்களும் நன்றி கூற வேண்டியதே. வேண்டியோர் ஷை புத்தகசாலையாரிடமிருந்து பெறுக.

—பத்திராதிபர்.

இரத்னபுரி இரகசியம்.

ஓர் அற்புதமான புதுநாவல் 2 பாகங்கள்.

இதில் மிக்க ஆச்சரியமும் நெஞ்சு திடுக்கிடக் கூடியவைவும், ஆதிமுதல் அந்தம் வரையில் மனதைக் கவரக்கூடியவைகளுமான சம்பவங்கள் நிறைந்துள்ளன. பலவித கட்டவடிக்கைகளையுடைய பாத்திரங்களும் இருப்பதால் அனேக நீதிகளும் புத்திமதிகளும் தக்க திருஷ்டாந்த பூர்வமாக நிரூபிக்கப்பட்டிருக்கின்றன. இது ஸ்ரீமான் ஆரணி குப்புசாமி முதலியாரவர்களால் தெளிவான இனிய தமிழ்நடையில் எழுதப் பெற்றது. நமது சிறுவர் சிறுமிகளும் ஸ்திரீகளும் அவசியமாய் உணரவேண்டிய இலௌகிக ஆசார விஷயங்களைப்பற்றி ஆங்காங்கு விளக்கிக் கூறப்பட்டிருக்கிறது. இதன் முதற் பாகத்தின் இனிமையும் அருமையும் வாசிப்போர்களால் முன்னமே புகழ்ந்து கூறப்பட்டிருக்கின்றன. ஆதலால் இதைப்பற்றி நாம் அதிகமாய்க் கூறவேண்டுவதின்றும். இதில் எல்லா ரசங்களும் பூரணமாயிருக்கின்றன வென்று மட்டும் கூறுகிறோம்.

இது உயர்ந்த கடிதத்தில் அச்சிடப்பட்டது. டபின் கிரௌன் 1-க்கு 16-கொண்ட அளவில் 1260 பக்கங்கள் கொண்டது. 2-ம் பாகத்தில் நூலாசிரியருடைய ஆப்டோன் படம் அடங்கியிருக்கிறது.

விலை 2-பாகங்களும்	ரூ.	3	4	0
2-ம் பாகம் (முதற்பாகம் வாங்கியவர்கட்கு மட்டும்)	ரூ.	1	12	0

குறிப்பு:—ஆனந்தபோதினி சந்தாதாரர்கட்கு மார்ச்சு மாதக்கடைசி வரையில் இரண்டு பாகமும், ரூபா 2—12—0. சீக்கிரம் முந்துங்கள்.

ஆனந்த போதினி.

ஒரு முதல்தர மாதாந்தத் தமிழ் சஞ்சிகை. சிறியோர் பெரியோர் யாவரும் அவசியம் வாசிக்கத் தக்கது. 40 பக்கம் விஷயங்களடங்கியது.

வருஷ சந்தா விகிதம்	இந்தியா பர்மா, சிலோனுக்கு	ரூ.	1	0	0
	வெளி நாடுகளுக்கு	ரூ.	1	4	0

ஆனந்தபோதினி மாதிரி காப்பி கடிதம் எழுதினால் இலவசமாய் அனுப்பப்படும்.

மானேஜர்:—ஆனந்தபோதினி ஆபீஸ்.
நெ. 6. வெங்கிடேச மேஸ்திரி வீதி, சௌகார் பேட்டை, மதராஸ்.

ஸ்ரீ கிருஷ்ண விலாஸம் பிரஸ், திருமங்கலம்.